பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 25 ஞாயிற்றுக்கிழமை 07.02.2021 கதிர் 94

## இனி இது ரகசியம் அல்ல!

தென்னிலங்கைத் தலைவர்கள் – குறிப்பாக விமல் வீரவன்ஸ போன்றோர் – அடிக்கடி தெரிவிக்கும் ஒரு கருத்து எனக்கு விளங்குவதில்லை.

*"தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தால் அடைய முயற்சித்த* பக்கம்02

# வரலாறு காணாத எழுச்சிக்கு இன்று தயாராகின்றது யாழ்.


நேற்றைய நான்காம் நாள் பேரணி

## கிளிநொச்சியிலிருந்து காலை வருகின்றது நீதிக்கான பேரணி

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி மன்னாரில் இருந்து நேற்றிரவு கிளிநொச்சி நகரை வந்தடைந்தது. இன்று காலை 8 மணியளவில் கிளிநொச்சி டிப்போச் சந்தியில் ஆரம்பமாகும் பேரணி, யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கவுள்ளது. இதில் பங்கேற்கப்பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தயாராகியுள்ளனர். 2

## யானையின் சடலம் வவுனியாவில் மீட்பு!



வவுனியா கனகராஜன் குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குழவிசுட்டான் வயல் பகுதியில் மின்சாரத்தில் அகப்பட்டு காட்டு யானையொன்று உயிரிழந்த நிலையில் நேற்று 2

## பெரியகல்லாறில் நேற்று ஆசிரியரின் சடலம் மீட்பு!



களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்–குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் உள்ளவீடொன்றில் இருந்து ஆசிரியர் ஒருவரின் 2

## தமிழ்பேசும் சமூகத்தின் அடுத்த தலைமுறையும் வீறுகொண்டு களத்தில்!




## மாங்குளத்தில் பஸ் விபத்து!



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் ஏ9 வீதியில் விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது.

காலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பஸ் 2

## மேலும் எண்மர் சாவு; கொரோனா காவு 351

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் 8 பேர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

இதன்படி கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந் 2

## நேற்றும் 726 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்றும் 726 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் 2

## இலங்கையில் நேற்று 3,838 பேருக்கு ஏற்றப்பட்டது கொரோனாத் தடுப்பூசி

இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 838 கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள முன்கள பணியாளர் 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

*இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் கவுன்சில் மூலமும் வேறு வழிகளி லும் பெற்றுக் கொடுக்க புலம்பெயர் அமைப்புகள் முயற்சிக்கின்றன. அதனை அனுமதிக்க மாட்டோம்."* – என்று அடிக் கடி கூளுரைக்கின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

அப்படி முயற்சிப்பதில் என்ன தவறு என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' அர்த்தம் பண் ணிய கொழும்பு, அதனை அதே 'அரச பயங் கரவாத' முறைகளில் முறியடித்து விட்டது என்பதும் உண்மைதான்.

போராட்ட வழிமுறை எது என்பது சிக்கலான விவகாரம் என்று புரிகின்றது. புலிகள் ஆயுத வழியை நாடினார்கள். இப்போது அது இல்லை.

அதற்காக தமிழர்களின் இலட்சியம் – வேணவா – அபிலாஷை – இல்லை என்று அர்த்தமில்லையே. அவை சட்ட விரோதமானவை என்பதும் ஏற்றுக்கொள் ளத்தக்கதல்ல.

தமிழர்கள் உள்ளக சுயநிர்ணய உரி மையின் அடிப்படையில் தமது அபிலாஷை களை முன்வைத்துப் போராடலாம் என் பதை இலங்கையின் உயர்நீதிமன்றமே தனது தீர்ப்பு ஒன்றில் தெளிவுபடுத்தி விட்டது.

அப்படி இருக்கையில், அந்த இலக்கை வைத்து இலங்கைத் தமிழர் களின் ஓரங்கமான புலம்பெயர் தமிழர் களும் சேர்ந்து போராடுகின்றமை எப் படித் தப்பாகும்...?

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் காகப் புலிகள் ஆயுத வழியில் போராடி னார்கள் என்பதற்காக, ஆயுத வழியில் லாத பிற – ஏற்றுக் கொள்ளத்தக்க – மார்க் கங்களில் பிற தரப்பினர் போராடக் கூடாது என்று சட்டம் இருக்கின்றதா என்ன...?

புலிகள் ஆயுத வழியில் அடைய முடியாததை ஏனையோர் – புலம் பெயர் தமிழர்களும் புலத் தமிழர்களும் – வேறு முறையான மார்க்கத்தில் அடைவதில் தவறு ஒன்றும் இல்லையே...!

அதற்கு ஏன், அந்த விடயம் சட்ட விரோ தமான முறைமை மாதிரி விமல் வீர வன்ஸ போன்றோர் குதிக்கின்றனர்? எனக்கு விளங்கவில்லை...!

★ ★ ★

'தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங் கள் தரப்படும்.' – என்றார் இயேசு பிரான். கொவிட் தடுப்பூசி விவகாரமும் அப் படித்தான் போலும். கேட்டால்தான் தரப் படும் போல.

நாடு முழுவதிலும் மத்திய, மாகாண அரசுகளின் கீழ் உள்ள வைத்திய சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் எல்லோருக்கும் – அவர்கள் விருப் பத்துக்கு ஏற்ப – கொவிட் தடுப்பூசி தாரா ளமாக ஏற்றியாகி விட்டது.

ஆனால், உள்ளூராட்சி சபைகளின் கீழ் பணியாற்றும் சுகாதார ஊழியர்க ளுக்கு மட்டும் அவை வழங்கப்படவில்லை.

வடக்கில், வலிகாமம் கிழக்கு (கோப் பாய்) பிரதேச சபையின் தவிசாளர் இது அநீதி என்று பத்திரிகை அறிக்கை வெளி யீட்டு ஆரவாரம் பண்ணினார். அவ் வளவுதான். அவரது பிரதேச சபையில் பணியாற்று 29 சுகாதார ஊழியர்களில் விருப்பம் தெரிவித்த 19 ஊழியர்களுக்கு சத்தம் சந்தடியின்றி கொவிட் தடுப்பூசி ஏற்றியாகிவிட்டது.

வடக்கில், ஏனைய எந்த உள்ளூராட்சி சபைக்கும் இந்த வசதி இன்னுமே வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. யாழ். மாநகர சபையில் மட்டும் சுமார் இரு நூறு சுகாதார ஊழியர்கள் உள்ளனர். அவர்களுக்கும் வழங்கப்படவில்லை.

வலி. கிழக்கு பிரதேச சபை தலைவர் போல தடுப்பூசி வழங்காமைக்கு ஆர்ப் பாட்டம் பண்ணினால்தான் – தட்டி னால்தான் – கதவு திறக்கப்படும் போலத் தோன்றுகின்றது.

–மின்னல் –

## மேலும் எண்மர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தோரின் எண்ணிக்கை 351 ஆக அதி கரித்துள்ளது.

இவர்களில் 338 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி உயிரிழந் துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாங்குளத்தில் பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி விபத் துக்குள்ளா கியுள்ளது.

குறித்த விபத்து நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் பதிவா கியுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ் வீதி அருகில் உள்ள தனியார் காணி ஊடாகப் பய ணித்துள்ளது. எனினும் அந்த விபத்தின் போது பயணித்த பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பெரியகல்லாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சடலம் மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சி குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியகல்லாறு – 02, கனடியன் வீதியை சேர்ந்த 30 வயதையுடைய களு வாஞ்சிகுடியில் உள்ள பிரபல பாடசாலை யென்றில் ஆரம்பப் பிரிவில் கடமையாற் றிவந்த ஆங்கில ஆசிரியரொருவரே தூக் கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவரின் சகோதரி யின் குடும்பத்தகராறிக்கு இவரின் பிரிவால் விடிவுகிடைக்கும் எனும் எண்ணப்பாட்டின் அடிப்படையில் கடிதம் ஒன்றினை எழுதி வைத்துவிட்டே இவரது உயிரை மாய்த்துக் கொள்வதற்காக தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக விசாரனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவிற் கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற களு வாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தி னம், பிரேதத்தை பார்வையிட்ட பின்னர் பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத் தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனைக்குட்படுத்தும் படி பொலி ஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரனைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யானையின் சடலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(சனிக்கிழமை) மீட்கப்பட்டுள்ளது.

குழவிசுட்டான் தெகிழ்பழந்தான் பகுதி யில் உள்ள வயல் பகுதியில் யானையின் சடலம் இருக்கின்றமையை அவதானித்த கிராம மக்கள் கனகராயன்குளம் பொலி ஸாருக்குத் தகவல் தெரியப்படுத்தியிருந் தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலி ஸார் சடலத்தை பார்வையிட்டதுடன், வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் தகவல் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில், இராணுவம் , பொலி ஸார், வனஜீவராசிகள் திணைக்களத்தி னர் இணைந்து விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் வேளாண்மை செய்து வந்திருந்த நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் விசாரணைகளுக்காக பொலிஸார் அழைத்து சென்றிருந்தனர்.

யானையின் சடலம் துர்நாற்றம் வீசு வதால் பல நாள்களுக்கு முன்னரே இறந்தி ருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர்.

## நேற்றும் 726 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 68 ஆயிரத்து 576 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற் றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் மேலும் 1,133 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 62 ஆயி ரத்து 694 பேர் குணமடைந்துள்ளதுடன் 5 ஆயிரத்து 631 பேர் வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## நீதிக்கான பேரணியின் நான்காம் நாள் பதிவுகள்...




# க.பொ.த. (சா.த.) செயன் முறை பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டன!

### கல்வி அமைச்சு

நாட்டில் நிலவும் கொரோனா அச்சுறுத் தல் காரணமாக 2020 ஆம் ஆண்டுக் கான க.பொ.த. சாதாரணதர செய்முறை பரீட்சையை இடைநிறுத்த முடிவு செய் துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அமைச்சின் செயலா ளருடன் கலந்துரையாடிய பின்னர், பாடசா லையில் இடம்பெற்ற பரீட்சை பெறுபேறு களின் அடிப்படையில் புள்ளிகளை பெற்று அதன் அடிப்படையில் முடிவுகளை அறி விக்க தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தரம் 10 இல் மூன்று தவ ணையிலும் 11 ஆம் வகுப்பில் இரு தவ ணைகளிலும் பெறப்பட்ட மதிப்பெண் களை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும் என அனைத்து பாடசா லைகளின் அதிபர்களுக்கும், கல்வி வலை யத்துக்கும் சுற்றறிக்கை அனுப்பட்டுள்ள தாகக் கூறினார்.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நேற்றைய மாலைப்பதிப்பில் செயல்முறைப் பரீட் சைக்குப் பதிலாக க.பொ.த (சா/த) பரீட்சை கள் இடைநிறுத்தம் என்றும் தவறுதலாக பிரசுரமாகியுள்ளது.)

## வரலாறு காணாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று யாழ்ப்பாணம் நகரிலிருந்து பொலிகண்டி வரை வரலாறு காணாத மக்கள் எழுச்சிக்கான ஏற்பாடுகளை சிவில் அமைப்புகளும், தமிழ்த் தேசியக் கட்சி களும் முன்னெடுத்துள்ளன.

தமிழ்பேசும் மக்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித் தும் சர்வதேசத்திடம் நீதி கோரியும் முன் னெடுக்கப்படும் மாபெரும் தொடர் கவ னயீர்ப்புப் போராட்டத்தின் நான்காம் நாளான நேற்று வவுனியாவில் இருந்து காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி ஹொறவப்பொத்தானை வீதி ஊடாக மன்னார் நோக்கிப் பயணித்தது.

நண்பகல் 12 மணியளவில் மன்னார் மடுச் சந்தியை அடைந்த பேரணி அங்கி ருந்து முருங்கன் ஊடாக மன்னார் நகர் நோக்கிச் சென்றது.

இதன்போது, பிரதான வீதிகளில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளில் பொலிஸ் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்ட நிலை யில் பல்வேறு தடைகளையும் தாண்டி குறித்த பேரணி மன்னார் பிரதான பாலம் ஊடாக மன்னார் நகரைச் சென்றடைந் தது.

மன்னார் பிரதான பாலத்தில் பொலி ஸார் குவிக்கப்பட்டதோடு, மன்னார் நீதி மன்றத்தின் கட்டளையையும் பொலிஸார் ஒலி பெருக்கி மூலம் அறியப்படுத்தினர்.

அத்துடன், பேரணியாக வந்த மோட் டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின் இலக்கங்களையும் பொலிஸார் பதிவு செய்த பின்னர் மன்னார் நகரப் பகுதிக் குள் செல்ல அனுமதித்தனர். மன்னார், பிரதான பாலத்தில் இருந்து மன்னார் நகரப் பகுதியில் உள்ள தந்தை செல்வா சிலையடி வரை குறித்த பேரணி சென்றது.

வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உற வுகள் ஆகியோரும் பேரணியில் பங்கேற் றனர்.

மேலும், வவுனியா, மன்னார் மாவட் டங்களைச் சேர்ந்த தமிழ் மக்களுடன் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம் மக் களும் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்துகொண்டனர்.

குறித்த பேரணி பெருமளவு மக்கள் வெள்ளத்துடன் மன்னாரிலிருந்து வெள் ளாங்குளம் ஊடாக மல்லாவி நகருக்கு நேற்று மாலை சென்றது. அங்கிருந்து மாங்குளம், திருமுறிகண்டி, இரணைமடுச் சந்தி ஊடாகச் சென்ற பேரணி கிளிநொச்சி டிப்போ சந்தியை நேற்றிரவு 8 மணியள வில் வந்தடைந்தது. இன்று காலை யாழ்ப் பாணம் நோக்கிப் பேரணி வருகின்றது.

இந்தப் பேரெழுச்சிப் பேரணியில் பங் கேற்றுள்ள தமிழ்பேசும் மக்கள் அரசுக்கு எதிராகவும் இராணுவத்துக்கு எதிராகவும் விண்ணதிரக் கோஷங்களை எழுப்புவதுடன் சர்வதேசத்திடம் நீதி கோரி வேண்டுகோள் களையும் விடுத்து வருகின்றனர்.

## இலங்கையில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற் றப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி கடந்த 29ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமா னது. முதல் நாளில் 5 ஆயி ரத்து 286 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டது. சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பாது காப்புத் தரப்பினருக்கே இவ்வாறு தடுப்பூசி செலுத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் 9 ஆயிரத்து 983 பேருக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த 9 நாள்களில் ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 148 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

# பொலிகண்டி எழுச்சிப் பேரணியில் அணிதிரள யாழில் விழிப்புணர்வு!

## சித்தார்த்தன், சரவணபவன், சசிகலா இணைந்து மேற்கொண்டனர்





யாழ்ப்பாணம், பெப்.07

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழ் பேசும் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்துக்கு இன்று யாழ்ப்பாணத்தில் மக்கள் பேரெழுச்சியாய் திரள விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மருதனார்மடம் சந்தையில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு நடவடிக்கை யாழ். குடாநாட்டின் பல இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சசிகலா ரவிராஜ் உள்ளிட்டோர் இந்த விழிப்பூட்டல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழ் பேசும் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டம் கடந்த மூன்றாம் திகதி பொத்துவிலில் ஆரம்பமாகியதுடன் நான்காம் நாள் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்தப் போராட்டம் மக்களின் பேரெழுச்சியுடன் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

## ஒரு நாளைக்கு 6 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்படும் – சுதர்ஷினி



கொரோனாத் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டவுடன், ஒரு நாளைக்கு 6 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்படும் என கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இதுவரை ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும்தடுப்பூசி பெற்றவர்களுக்கு எந்தவொரு பெரிய பக்க விளைவுகளும் ஏற்படவில்லை என்றும் 9 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி போட அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசி நாட்டை வந்தடைந்ததும் தடுப்பூசியை செலுத்துவதற்கு நாடளாவிய ரீதியில் 4 ஆயிரம் நிலையங்கள் நிறுவப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

## புதிய அரசமைப்புக்கான யோசனை ஆளும் கட்சி புதன் சமர்ப்பிக்கும்!

### பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு



உத்தேச அரசமைப்பில் தேர்தல் முறைமை முழுமையாக மாற்றியமைக்கப்படும். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள். புதிய அரசமைப்பு தொடர்பில் பொதுஜன பெரமுனவின் யோசனைகளை எதிர்வரும் புதன்கிழமை நிபுணர் குழுவிடம் முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம் என பொதுஜன பெரமுனவின் தவிசாளரும், கல்வி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பாக வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது நடைமுறையிலுள்ள இரண்டாம் குடியரசு அரசமைப்பு 42 வருட காலம் பழைமையானது. தற்போதைய அரசியல் மற்றும் சமூக மாற்றத்துக்கு அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பொருத்தமற்றனவாக உள்ளது. ஆகவே, கால தேவைக்கு ஏற்ப பொருந்தும் அரசமைப்பை உருவாக்குவதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்க இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் முயற்சித்த போதும் அதனைச் செயற்படுத்த முடியவில்லை. எக்கட்சி தலைமையிலான அரசாங்கமும் இதுவரையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும்,பொதுத் தேர்தல் காலத்திலும் அரசமைப்பு தொடர்பில் இரண்டு பிரதான வாக்குறுதிகளை நாட்டு மக்களுக்கு வழங்கியது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கல், புதிய அரசமைப்பு உருவாக்கம் ஆகியவை அவற்றில் பிரதானமானவையாகும். இடம்பெற்று முடிந்த பொதுத் தேர்தலில் பொதுஜென பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெனவர்தன குறிப்பிட்ட கருத்தைப் பெரும்பான்மை மக்கள் மாற்றியமைத்துள்ளார்கள்.

உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பில் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் யோசனைகளை இரண்டு மாத காலத்துக்குள் நிபுணர்கள் குழுவிடம் முன்வைக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் யோசனைகளை எதிர்வரும் புதன்கிழமை குழுவினரிடம் முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை இந்த வருடத்தின் டிசெம்பர் மாதத்துக்குள் நிறைவேற்றுவோம். அரசமைப்பு விடயத்தில் தாமதம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. – என்றார்.


21 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 . 09 . 1975

இறப்பு 07 . 02 . 2000



செல்வன்

இராசரத்தினப் பத்தர் சுகந்தன்

தம்பி குஞ்சன்!
21 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் என்றும்
உன் நினைவுகளுடன் வாழும்!

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்
நேசம் அழகு நகை.



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வதேசமும் குற்றவாளிதான்!

**இலங்கைத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தில் சில விடயங்களை சர்வதேசம் தொடர்ந்தும் மறந்து பேசுகின்றது. அது தான் விசனிக்கத்தக்க விவகாரமாகும்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்த சுதந்திரத்திற்கான ஆயுதப் போராட்டத்தை இலங்கை அரசு 'பயங்கரவாதம்' என்று முத்திரை குத்தியது. அந்தப் போராட்டத்தினுள் புதைந்து கிடந்த நீதி, நியாயங்கள், உண்மைகளை புரிந்து கொள்ளாத – அல்லது புரிந்து கொள்ள விரும்பாத – சர்வதேச சமூகமும் அந்த முத்திரையை – பயங்கரவாத அடையாளத்தை – அங்கீகரித்தது.**

**அதனால் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை இலங்கை அரசுடன் சேர்ந்து சிதைத்தழிப்பதற்கு இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகம் முழு ஒத்துழைப்பு நல்கியது; அந்தச் செயற்பாடுகளுக்குத் துணைபோனது.**

**இதனால், தமது இனத்தின் விடுதலைக்காக கொழும்பு அரசுடன் போராடப் புறப்பட்ட புலிகள், இறுதியில் சர்வதேசத்துடனும் போராடி அழிய வேண்டியவர்களானார்.**

**இது, பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் முழந்து விட்ட வரலாறு.**

**புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் புலிகளை அழித்தொழிப்பதற்கு இந்தியா உட்பட சர்வதேச சமூகமும் நேரடியாகத் துணை போனது, போர்வெற்றியில் பங்காளியானது என்பவை எல்லாம் பரம இரகசியங்கள் அல்ல.**

**அன்று, புலிகளை அழிப்பதற்கு நேரடியாக இலங்கை அரசுடன் பங்காளியானவர்கள் இன்று, அந்த யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தாம் நேரடியாக உதவி,ஒத்தாசை புரிந்த இலங்கைப் படைகள் அப்போது புரிந்த யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்களுக்கு தனித்து இலங்கை அரசின் மீதும் இலங்கைப் படைகள் மீதும் குற்றம் சுமத்தி விட்டுத் தம்மை நல்லபிள்ளைகள் மாதிரிக் காட்டி வேடம் போடுகின்றன; நியாயத்தத்துவம் வேறு பேசுகின்றன.**

**அதுவும் கூட, அந்த யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்களில் அளவு கடந்து மோசமாக இலங்கை படைகள் ஈடுபட்டுள்ளன என்பதை அச்சமயத்தில் சந்தேகத்துக்கு இடமின்றி பட்டவர்த்தனமாகப் பார்த்திருந்து விட்டு – அச்சமயத்தில் அவற்றைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ, தடுக்கவோ நடவடிக்கை எடுக்காமல், அந்தக் கொடூரங்களுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிவதற்கு இடமளித்துப் பார்த்திருந்து விட்டு – இப்போது நியாயம் பிளக்கின்றது சர்வதேசம்.**

**மேலும், அந்த வேளையில் அத்தகைய கொடூரங்களைப் பகிரங்கப்படுத்தி தடுத்து நிறுத்தி, நேர்சீர் செய்வதற்கான சகல வசதிகளையும், வாய்ப்புக்களை, தகைமைகளையும் ஐ.நாவும் சர்வதேசமும் கொண்டிருந்தும் கூட, எந்த வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காமல், தமிழின அழிப்புக் கொடூரம் முள்ளிவாய்க்கால் வரை வந்து உச்சம் பெறுவதற்கு இடமளித்து, சம்மதம் வழங்கி, வாய்ப்பளித்து நின்றது சர்வதேசம்.**

**இலங்கையும் அதன் படைகளும் செய்தவை குற்றம் என்றால், அந்தக் குற்றங்களுக்கு நேரடியாக உதவி ஒத்துழைத்து, உடந்தையாக இருந்தது சர்வதேச சமூகம்.**

**தமது தண்டனைச் சட்டக் கோவையில் ஒரு விடயம் உண்டு. குற்றத்துக்கு என்ன தண்டனையோ அதே தண்டனையும் கட்டாயப் பொறுப்பும் அக்குற்றத்தை இழைப்பதற்கு உதவி, ஒத்தாசை புரிந்து உடந்தையாக இருந்தவருக்கும் உண்டு.**

**அந்த வகையில் பார்த்தால், இலங்கை விவகாரத்தில் –யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் விடயத்தில் இலங்கை அரசோடு, இந்த யுத்தத்தில் அதற்கு உதவிய சர்வதேச தரப்புகளும் கூடக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டேயாக வேண்டும்.**

**நமது சட்ட, நீதி முறைமைகளில் இன்னொரு விடயமும் உண்டு. குற்றமிழைத்த தரப்புகளில் ஓரிருவர் அரச சாட்சியமாக – 'அப்ரூவர்' ஆக (உறுதிப்படுத்துபவராக) – மாறி உண்மை விடயங்களை அம்பலப்படுத்தி, ஒப்புவித்து நிரூபிப்பவராயின் அவரை மன்னித்துவிடுவித்து விட்டு, ஏனைய எதிரிகளுக்குத் தண்டனை விதிப்பதாகும்.**

**இன்றைய நிலையில் இலங்கையின் யுத்தக்குற்றவிடயங்களில், சர்வதேசத் தரப்புகளில் பலவும், இலங்கை நாட்டின் மீதோ அரசின் மீதோ வெளியில் நின்று குற்றம் சுமத்தும் தகுதியுடையவை அல்ல. மாறாக, குற்றமிழைத்த தரப்பில் நின்று 'அப்ரூவர்' ஆக மாறி, உண்மையை ஒப்புவிப்பதன் மூலம் பாவமன்னிப்பு – பிராயச்சித்தம் – பெற வேண்டியவையாகும்.**

**அவற்றைச் செய்யாமல், வெளிவேஷமிட்டு, நல்லபிள்ளையாக அவை நடிப்பது அர்த்தமற்றது.**

**இலங்கை இழைத்த யுத்தக் குற்றங்கள் தொடர்பில் தன்னிடமுள்ள – மிகக் காத்திரமான – தொழில்நுட்ப சாட்சியங்கள், ஆதாரங்கள் ஆவணங்கள், காணொலிகள் போன்றவற்றை மடக்கி ஒளித்து வைத்துவிட்டு, இது விடயத்தில் இலங்கை மீது அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச தரப்புகள் பொதுவாக வசைபாடுவது வெறும் 'பம்மாத்து' ஆகும். தாங்களும் குற்றவாளிகள் என்பதை உண்மையை மூடிமறைக்கும் சர்வதேசத்தின் அடுத்த குற்றச் செயலாகும் இது.**

# வடக்கில் கொரோனாத் தடுப்பூசி 85 வீதம் பேருக்கு ஏற்றப்பட்டது!

### மாகாண பணிப்பாளர் தகவல்



'வடக்கு மாகாணத்தில் பொதுமக்களுக்கு கொவிட் - 19 தடுப்பூசி மருந்து வழங்கும் பணிக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. தடுப்பூசி மருந்து கிடைத்ததும் மறுநாளே பொது மக்களுக்கு வழங்கும் பணி ஆரம்பிக்கப்படும்' என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் தெரிவித்தார். பொதுமக்களுக்கு வயது அடிப்படையில் கொவிட் -19 தடுப்பூசி மருந்து வழங்கும் நடவடிக்கையை முன்னெடுக்க சுகாதார அமைச்சால்திட்டம்வகுக்கப்பட்டுள்ளது.

அதனால் வடக்கு மாகாணத்தில் பொது மக்களில் வயது அடிப்படையிலான விவரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்து தயாராக வைத்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கொவிட் - 19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த தடுப்பூசி மருந்து வழங்கலுக்கு வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 944 சுகாதாரத் துறை சேவையாளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இந்தப் பணியில் முதல் நாளில் 2 ஆயிரத்து 997 பேர் கொவிட் - 19 தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர். இது 30 சதவீதத்தினர் ஆகும்.

இரண்டாம் நாளில் வட மாகாணத்தில் 1,530 சுகாதார சேவையாளர்கள் கொவிட் - 19 தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர். 7ஆம் நாளான நேற்று 217 பேர் கொவிட் - 19 தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர்.

இதுவரை 85 சதவீத சேவையாளர்கள் தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர். பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகள் மற்றும் கர்ப்பம் தரிக்கக் காத்திருப்போர் என மூன்று வகையினரை இந்த தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவேண்டாம் என்று அறிவுறுத்தப் பட்டது.

அதனால், அவ்வாறானவர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் கொவிட் - 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள நாளை மேலும் ஒருநாள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. - என்றார்.

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 1,200 நிறுவனங்களுக்கு வழக்கு!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

மேல்மாகாணத்தில்தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாகச் செயற்பட்டதாக 1,200 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிவை வருமாறு –

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளுக்கமைய, சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்குப் புறம்பாக செயற்படும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் மேல் மாகாணத்தில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் 10 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த சோதனை நடவடிக்கைகளில் சுகாதார பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். அதற்கமைய, இந்த சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தமையுடன், இதன்போது 645 நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 608 நிறுவனங்கள் முறையான சட்டவிதிகளை கடைப்பிடித்திருந்ததுடன், 34 நிறுவனங்கள் சட்டவிதிகளை பின்பற்றியிருக்கவில்லை.

இந்நிலையில், கடந்த மாதம் 10 ஆம் திகதி முதல் இதுவரையில், 11 ஆயிரத்து 565 நிறுவனங்கள் இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது 10 ஆயிரத்து 214 நிறுவனங்கள் முறையான சட்ட விதிகளைக் கடைப்பிடித்திருந்ததுடன் , அவற்றுள் 1,351 நிறுவனங்கள் சட்ட விதிகளுக்கு புறம்பாக செயற்பட்டன என அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்நிறுவனங்களில் 1,200 நிறுவனங்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டத்துக்கமையவழக்குத்தொடரப்பட்டுள்ளது.

# நீர்ப்பாசன செழுமை' நிகழ்வு யாழில் நேற்று இடம்பெற்றது!





நீர்ப்பாசன செழுமை' கிராமிய குளங்களை அண்டியுள்ள 5 ஆயிரம் விவசாய நீர்ப்பாசன தொகுதிகளை மறுசீரமைக்கும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட ஆரம்ப நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) யாழ் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நெடுங்குளம் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாண பிரதேச செயலகர், கமநல சேவை திணைக்களத்தின் வடமாகாண பிரதிப்பணிப்பாளர், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் இனவாத இராச்சியம் உருவாக்கம்!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இனவாத இராச்சியமே தற்போது உருவாகியுள்ளதென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழர் பேரணி நான்காவது நாளாகவும் நேற்று(சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

## மனோ கணேசன் காட்டம்

இந்நிலையில், மன்னார் பஸ் நிலையத்திற்கு முன்னால் பேரணியில் கலந்து கொண்ட மனோ கணேசன் இவ்வாறு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தமிழரும் முஸ்லிமும் இந்த தேசத்தில் வாழ்வதற்கான உரிமை கொண்டவர்கள். வரலாற்றில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்பதற்கான குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டு இருக்கின்றது.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒதுக்கி வைத்து விட்டு கோட்டாபய அரசாங்கம் இனவாத இராச்சியத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஆகவேதான், இந்த அடக்குமுறைக்கு எதிராக முஸ்லிம்களும் தமிழர்களும் அணிதிரண்டு இருக்கின்றார்கள்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாவில் இருந்து 1,133 பேர் குணமடைவு!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 133 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 62 ஆயிரத்து 594 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 67 ஆயிரத்து 850 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 4 ஆயிரத்து 913 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 505 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 343 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு தினங்களின் பின் சடலமாக காணாமற்போன இளைஞன் மீட்பு!



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடி வாவியில் மீன்பிடிக்கச் சென்று வாவியில் விழுந்து காணாமற்போன இளைஞர் சடலமாக இரண்டு தினங்களுக்கு பின்னர் நேற்று (சனிக்கிழமை) பழைய கல்முனை வீதி காத்தான்குடி வாவியில் மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய மீரா முகைதீன் முகமது முனாஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் கடந்த வியாழக்கிழமை வாவியில் நிறுத்தப்பட்டிருந்த மீன்பிடி படகில் காணப்பட்ட வலையை ஒழுங்குபடுத்துவதற்காக சிறிய தோணி ஒன்றில் படகை நோக்கி சென்று கொண்டிருந்த போது வாவியில் தவறி விழுந்து காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து அந்த இளைஞனைத் தேடும் பணிகள் இடம் பெற்றுவந்த நிலையில் நேற்று காத்தான்குடி வாவியில் சடலம் ஒதுங்கியிருப்பதைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டது.

இதில் மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கஞ்சாவுடன் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது!





யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சுமார் 1.8 மில்லியன் ரூபா மதிப்புள்ள கேரள கஞ்சா பொதிகளை கடத்திச் செல்ல முயன்ற இரண்டு சந்தேக நபர்களை விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

கேரள கஞ்சாவை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு - தெமட்டகொடவுக்கு கடத்த முயன்ற சந்தேகநபர்கள் இருவரும் விசேட அதிரடிப்படையினரால் கடந்த வெள்ளிக்கிழமை ஈரப்பெரியகுளம் குருந்துபிட்டிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெப்பத்திகொல்லாவ விசேட அதிரடிப்படையினருக்குக்கிடைத்த இரகசியதகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது மேற்படி சந்தேக நபர்கள் காரினுள் பொதி செய்து வைத்திருந்த 18 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா ஈரப்பெரியகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 43, 48 வயதுக்குட்பட்ட தெமட்டகொடவில் வசிப்பவர்கள் எனவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.












காலைக்கதிர்
Kalaikkathir




# பொத்துவில் முதல் பொலிகண்டி வரை தமிழ்ப் பேசும் மக்களின் பேரெழுச்சி!

ந.லோகதயாளன்



'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை'க்குமான மக்கள் ஆர்ப்பாட்டம் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகங்களை மட்டுமன்றி இனங்கள், மாவட்டங்களின் உறவுகளையும் வலுப்படுத்தி எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருப்பவர்களை நோக்கி சர்வதேசத்தைத் திரும்பி பார்க்க வைத்துள்ளது.

வடக்கு கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் பெப்ரவரி 28ஆம் திகதி அழைப்பு விடுத்தன.

**போராட்ட அழைப்பு**

3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை மேற்கொள்ள திட்டமிட்ட இந்தப் போராட்டம் தொடர்பில் 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை!' என்ற தலைப்பில் சிவில் சமூக அமைப்புக்கள் விடுத்த அழைப்பில் கூறப்பட்டிருந்தவை கவனிக்கத் தக்கவை.

வடக்கு,கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை' யான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் அனை வரும் ஒன்று திரளுமாறு வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு பூர்வீக குடிகளான நாம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எங்களது சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடி வருகின்றோம். ஆனால் தமிழர்களின் போராட்டங்களுக்கு செவிசாய்க்காத இலங்கை அரசு தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை




மேற்கொண்டு வருவதையும் யுத்தம் நிறைவடைந்து கடந்த பத்து ஆண்டுகளில் வடக்கு, கிழக்கை இராணுவ மயமாக்கிவரும் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடக்கு கிழக்கு பூர்வீக குடிகளான தமிழர்களின் இனப் பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி, அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காக பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது. இதன் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வன வளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்த மயமாக்கல் திட்டங்களை இலங்கை அரசாங்கமானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதனையும் வடக்கு, கிழக்கில் குருந்தூர்மலை ஐயனார் கோயில், வெடுக்குநாறி மலை சிவன் கோயில், நிலாவரை ஆகியவற்றுடன் கிழக்கில் கன்னியா பிள்ளையார் கோயில், முருகன் ஆலயம், வேற்றுச்சேனை சித்தி விநாயகர் ஆலயம் உட்பட்ட பல ஆலயங்களில் தமது பாரம்பரிய, கலாசார, சமய, வழிபாடுகளை செய்ய முடியாதவாறு ஆலயங்களை ஆக்கிரமிப்பு செய்யப்படுவதோடு அங்கு பௌத்த ஆலயங்களை நிறுவுவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. மேலும் வடக்கு, கிழக்கில் உள்ள சுமார் 200 ற்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்களும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தப்படுகின்றமையுடன் அவர்களைத் தொடர்ந்தும் கண்காணித்தும் வருகின்றனர் என்பதனையும் சர்வதேசத்துக்குக் காட்டுவோம்.

செயற்பாட்டாளர்களின் பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம் என்பவற்றைத் தடுப்பது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

அத்தோடு தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்களக் குடியேற்றங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைக் காணிகளை அபகரித்து சிங்கள குடியேற்றம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பில் உள்ள பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால் தரும் பசுக்களை திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும் நடந்தேறி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக காடுகள் அழிக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாஸாக்களை புதைக்கும் செயற்பாடுகளை இல்லாமல் செய்து ஜனாஸாக்களை எரியூட்டி வருகின்றனர். இதற்கு எதிராகப் போராடும் முஸ்லிம் சமூகத்தையும் அடக்கி ஆள முனைகின்றனர்.




உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பின்னர் பல தரப்பட்ட இஸ்லாமிய மக்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தடுத்து வைத்துள்ளனர். இதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரையும் கைது செய்து பல வருடங்களாகத் தடுத்து வைத்துள்ளனர்.

இதே போன்று சிறைகளில் விசாரணைகள் இன்றி தமிழ் அரசியல் கைதிகளாக பலர் உள்ளனர். ஆனால் பல குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ள அரசாங்கம் இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்ய தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தங்களது காணாமல் ஆக்கப்பட் உறவுகளைத் தேடி வருடக்கணக்கில் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். ஆனால் அவர்களுக்கான நீதியை வழங்காது அரசாங்கம் ஏமாற்றி வருகிறது.




அத்துடன் மலையக தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்திற்காக 1,000 ரூபா சம்பள உயர்வு கேட்டு போராடி வருகின்றனர் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாது அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரித்தல் உட்பட இலங்கையில் திட்டமிட்டு நடாத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள், பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பி வைத்த கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த கோரியும் வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் தமிழ் பேசும் மக்களாகிய எமது அவலக் குரல்கள் சர்வதேசத்தின் மனசாட்சிகளை தட்டும் அளவுக்கு எமது போராட்டத்தை அஹிம்சை வழியில் முன்னெடுக்க வேண்டியுள்ளதால் அனைத்து தமிழ் பேசும் மக்களையும், அரசியல் கட்சிகளிற்கும் இப்போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அந்த அழைப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# தண்டிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாத பிரேரணைகள், தீர்மானங்களால் என்ன பயன்?

பனங்காட்டான்

'போர் நடைபெற்ற வேளையில் மூன்று பிரதான நாடுகளின் தூதுவர்கள் என்னிடம் வந்து, இப்போது புலிகளை அழிக்க வேண்டியுள்ளது. அது முடியும் வரை எதுவுமே பேசாதிருங்கள். அந்த வேலை முடிந்த பின்னர் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் தீர்வை பெற்றுத்தருவோம் என்றார்கள். பத்து வருடங்கள் தாண்டிவிட்டது. அவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டனர் என்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் வாய்முறைப்பாடு அவருக்கே சமர்ப்பணம்.

ஜெனிவாவின் 46வது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் மூன்று வாரங்கள் உள்ளன. நாள்கள் நெருங்க நெருங்க இது தொடர்பான அங்கலாய்ப்புகளும் எதிர்பார்ப்புகளும் அதிகரித்துச் செல்கின்றன.

சிங்கள ஆட்சித்தரப்பில் ஒருவகை நெருக்குவாரம் காணப்படுகின்றபோதிலும், எதனையிட்டும் அஞ்சாத தோற்றப்பாட்டுடன் அனைத்தையும் தூக்கி வீசும் வழமையான போக்கே தென்படுகிறது.

தமிழர் தரப்பில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து, பல விட்டுக்கொடுப்புகளுடன் ஆவணத்தில் ஒப்பமிட்ட மூன்று தமிழ்த் தேசிய பெயர் கொண்ட பிரதான கட்சிகளும், இணைந்த நோக்கத்தை மறந்து தமக்குள் ஏதோ ஒன்றுக்காக முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.



மனித உரிமைகள் ஆணையாளர் வெரோனிகா மிச்சேல் பச்சலட் ஜெரியா அம்மையார் தமது அறிக்கையில் இலங்கை பற்றி சுட்டிய கருத்துகளின் முக்கிய பகுதி அம்பலமானதையடுத்து கொழும்பு ஊடகங்களும் அரசியல்வாதிகளும் அதனை விலாவாரியாக விமர்சித்து வருகின்றனர்.

போர்க்குற்றம் புரிந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள்மீது பயணத்தடை விதிக்க வேண்டும், அவர்களின் சொத்துகள் முடக்கப்பட வேண்டுமென்பவை ஆணையாளரின் முக்கிய பரிந்துரைகள்.

அத்துடன் வெளிநாடுகளுக்கு சமாதானப் படைகளாக இலங்கைப் படையினர் செல்வது தடை செய்யப்பட வேண்டும், வெளிநாடுகளில் இவர்கள் பயிற்சி பெற அனுமதிக்கக்கூடாது என்பவையும் இவரின் பரிந்துரைகள். தேவைப்பட்டால் - இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன்னால் கொண்டு செல்லலாமென மனித உரிமைப் பேரவையின் நாற்பத்தியேழு நாடுகளுக்கும் ஆணையாளர் கோடி காட்டியுள்ளார்.

இலங்கையில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்பட்ட பின்னர் ஆணையாளர்களாகவிருந்த லூயிஸ் ஆர்பர் அம்மையார், நவநீதம்பிள்ளை அம்மையார், ஸெயிட் அல் ஹூசேன் ஆகியோர் தத்தம் பதவிக் காலத்தில் படிமுறையாக இது தொடர்பான பல கருத்துகளையும் பரிந்துரைகளையும் முன்மொழிந்தனர்.

> “மனித உரிமைகள் பேரவையின் கண்டனம், கவலை என்பவையும், ஆணையரின் பரிந்துரை வேண்டுகோள் என்பவையும் எந்த நாட்டையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டவையல்ல. இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களை சம்பந்தப்பட்ட நாடு ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். அவ்வேளை மனித உரிமைகள் பேரவை அல்லது ஆணையர் எதுவுமே செய்ய முடியாது.



கனேடியரான லூயிஸ் அம்மையார் விடுதலைப் புலிகளின் பினாமி என்று இலங்கை குற்றம் சுமத்தியதால் அவர் விரக்தியுடன் ஒரு தவணையோடு பதவியிலிருந்த வெளியேற நேர்ந்தது. நவநீதம்பிள்ளை அம்மையார் ஆறு வருடங்கள் ஆணையாளராகவிருந்தபோது துணிச்சலாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மக்களின் வாழ்க்கை முறையை நேரில் பார்த்து பல தகவல்களைச் சேகரித்த இவரை ஒரு தமிழர் என்று முத்திரை குத்தி புறக்கணித்தது இலங்கை அரசு.

2014 முதல் 2018 வரை ஆணையாளராகவிருந்த அல் ஹூசேன்காலத்தில்தான் இலங்கை அரசின் இணைஅனுசரணையுடன் 30/1 பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச விசாரணைக்கான பொறிமுறைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தலையைச் சுற்றும் பம்மாத்தில் அனுபவம் கொண்ட சிங்கள ஆட்சிபீடம் காலநீடிப்புகளை பெற்றுவிட்டு, இறுதியில் அதிலிருந்து கைவிரித்தது. தமது பதவிக்காலம் முடிய அவரும் போய்விட்டார்.

தற்போதைய ஆணையாளர் 2018 செப்ரெம்பரில் பதவியேற்றவர். சிலி நாட்டின் முதலவாது பெண் ஜனாதிபதியாக பதவி வகித்த இவர் ஸ்பானிய சமூகத்தவர். சிலி நாட்டின் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தவர். தொழிலால் மருத்துவரான இவர், படைத்துறை செயற்பாட்டு நுட்பத்தை பிரதான பாடமாகப் பட்டப்படிப்பில் கற்றவர்.

இளவயதில் இவரும் இவரது தாய்தந்தையரும் பல தடவைகள் அரசபடைகளால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள். தந்தை சிறையில் சித்திரவதைக்குட்பட்டு மரணமானார். இதனைத் தொடர்ந்து சிலியை விட்டு தப்பிச் சென்று ஆஸ்திரேலியா, ஜேர்மன் நாடுகளில் மறைமுக வாழ்க்கையில் இருந்தவர் மிச்சேல்.



இத்தகைய பின்னணிகளைக் கொண்டவராக இவர் இருப்பதால், இலங்கையின் போர்க்காலத்தில் சிங்கள அரசினது படைத்தரப்பு எவ்வாறான இனப்படுகொலை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்திருக்கும் என்பதை இலகுவாக இவரால் உய்த்துணர முடிந்திருக்கும்.

2009 போர்க்கால மனித உரிமை மீறல்கள், அதன் பின்னரான மூன்று ஆணையர்களின் நடவடிக்கைகள், தீர்மானங்கள், காலநீடிப்புகள் ஆகியவற்றில் இலங்கையின் செயற்பாட்டை மையப்படுத்தியே இறுதியானதும் கடுமையானதுமான சில பரிந்துரைகளை இவர் இப்போது முன்மொழிந்துள்ளார். இவ்விடயத்தில் தமிழர் தரப்பு கவனிக்க வேண்டிய அல்லது தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் சிலவுண்டு.

மனித உரிமைகள் பேரவை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கீழ் இயங்குவது. இது ஒரு நீதிமன்றம் அல்ல. எதனையும் விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரமுள்ள நடுவமமும் அல்ல. இப்பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளும் விசாரணை நடத்தி தீர்ப்பளிக்கும் உரிமை பெற்றவையும் அல்ல.

சொல்லப்போனால், பெரும்பாலான உறுப்பு நாடுகளும் மனித குலத்துக்கெதிரான - மனித உரிமை மீறல்களுடன் சம்பந்தப்பட்டவையாகவும் உள்ளவை. எனவே இவை இன்னொரு நாட்டுக்கு எதிராக விரல் நீட்டி குற்றம் சுமத்த பெரும்பாலும் விருப்பம் காட்ட விரும்பாதவை.



அந்த வகையில் மனித உரிமைகள் பேரவையின் கண்டனம், கவலை என்பவையும், ஆணையரின் பரிந்துரை வேண்டுகோள் என்பவையும் எந்த நாட்டையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டவையல்ல. இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களை சம்பந்தப்பட்ட நாடு ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். அவ்வேளை மனித உரிமைகள் பேரவை அல்லது ஆணையர் எதுவுமே செய்ய முடியாது.

இதனை நன்கு தெரிந்துகொண்டே இங்கு நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களையும் இலங்கை அரசு நிராகரித்தது. இப்போதைய ஆணையாளர் மிச்சேல் அம்மையாரின் பரிந்துரைகளையும் இலங்கை மிகத்துணிச்சலாக நிராகரித்துவிட்டது.

இலங்கையின் பொறுப்புக்கூறல், போர்க்குற்ற விசாரணைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துவது பற்றி ஆணையாளர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். மனித உரிமைகள் பேரவையிலுள்ள 47 நாடுகளும் இதனையிட்டு சிந்திக்க வேண்டுமென்பது ஆணையாளரின் வேண்டுகோள். இதனையும்கூட அவர் பரிந்துரையாகவே முன்வைத்துள்ளார்.

இந்த உறுப்பு நாடுகள் இவ்விடயத்தில் எந்தளவுக்கு கரிசனை கொள்ளுமென்பது பிரதான கேள்வி. போதிய ஆதரவு கிடைக்காவிட்டால் அடுத்த நடவடிக்கை என்ன? குற்றவியல் நீதிமன்றத்தில்கூட போதிய ஆதரவு கிடைக்காவிட்டால் இவ்விவகாரம் மீண்டும் மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படும் சாத்தியமுண்டா?

அனைத்துலக மன்னிப்புச்சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட பல மனித உரிமை ஆர்வல அமைப்புகள் இலங்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரி வருகின்றன. ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகம் மனித உரிமை விவகாரத்தில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமென அதன் தூதுவர் அலைனா ரெப்பிளிற்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதானம், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பவற்றை உறுதி செய்ய மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளவற்றை வரவேற்றுள்ள கனடா, தொடர்ந்து அதற்கு ஆதரவளிக்குமென அதன் வெளிவிவகார அமைச்சர் மார்க்கானோ கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா ஆகியவைகளும் ஆணையாளரின் கருத்தையும் பரிந்துரைகளையும் வரவேற்றுள்ளன. ஆனால் இவ்விடயத்தை தாமதமின்றி முழுமூச்சுடன் தீவிரமாக செயற்படுத்த வேண்டிய மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளினதும் கூட்டு, அடுத்த கட்டத்துக்கு நகர முடியாமல் அறிக்கைப்போரிலும், ஊடக சந்திப்புக்களிலும், நேரடியாக பெயர் சொல்லும் தாக்குதல்களிலும் மோதிக்கொண்டிருக்கிறது.

இக்கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்கள், பேச்சாளர்கள் மட்டுமன்றி சிவில் அமைப்புகளின் குட்டித் தலைவர்களும் தங்கள் தலைகளை உயர்த்தி கைகளை நீட்டி சவால் முழக்கமிடுகின்றனர்.

(13ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா வியாபாரிகளின் போராட்டம் கைவிடப்பட்டது!

வவுனியா, ஜன.07

வவுனியா மொத்த மரக்கறி வியாபார சந்தையை பொலிஸார் திறக்க விடாதமையால் வீதியை வழிமறித்து, வியாபாரிகள் நேற்று (சனிக்கிழமை) போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது சந்தையை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்தின ஆகியோர், வியாபாரிகளுக்கு வாக்குறுதி வழங்கியமையை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கொரோனோத் தாக்கம் காரணமாக கொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள வவுனியா தினசந்தை, கடந்த சில நாள்களாக மூடப்பட்டிருந்ததுடன், காமினி மகா வித்தியாலயம் மற்றும் கண்டி வீதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் தற்காலிகமாக செயற்பட்டு வந்தது.

இதேவேளை, சந்தையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தமையுடன் அவர்களில் எவருக்கும் தொற்று அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை மீண்டும் சந்தையைத் திறப்பதற்கு சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியிருந்ததுடன் நகரசபையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் தினச்சந்தை தொற்றுநீக்கமும் செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று அதிகாலை சந்தையைத் திறப்பதற்காக வர்த்தகர்கள் வந்தநிலையில் பொலிஸார் அவர்களை சந்தையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனால் பொலிஸாருக்கும் வியாபாரிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.



நீண்டநேரமாகியும் தீர்வு கிடைக்காமையால், கொறவொத்தானை பிரதான வீதியை வழிமறித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த வீதியுடனான போக்குவரத்து 6 மணி நேரமாக இடைநிறுத்தப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் லால்செனவிரத்தின ஆகியோர் வியாபாரிகளுடன் கலந்துரையாடினர். ஏனைய சில ஊழியருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை விரைவாக செய்துவிட்டு, நாளை திங்கட்கிழமை முதல் சந்தையை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளிற்கமைய போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது.

Agriculture Information

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### 25.01.2020 தொடக்கம் 29.01.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

01.02.2021 தொடக்கம் 05.02 .2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர்சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, அன்னாசி, பச்சை மிளகாய் போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல் நிலை அவதானிக்கப்பட்டது இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

01. மந்தரம்நுவாரா மற்றும் லாகல பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

02. நுவரலியா, கந்தபோலா, ராகலா பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் கரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

03. தம்புள்ளளையை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் காரணமாக அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

04. பிபிலி பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

05. விலாச்சியா மற்றும் டுவுவேவா பகுதியில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

06. இந்தியாவிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாகவும் இறக்குமதி செய்யப்பட்ட வகைகள் கிடைக்காமையாலும் தம்புள்ள சந்தையில் உள்ளூர் சின்ன வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

07. லாகல, கலென்பிந்துநுவேவா பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹென்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

08. குலியபிட்டிய, குருநாகல் மற்றும் மெல்சிரிபுரா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹென்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

09. ராஜங்கனயா, எம்பிலிபிட்டிய பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

10. பாகிஸ்தானில் இருந்து குறைந்ததர மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 01.02.2021 | 02.02.2021 | 03.02.2021 | 05.02.2021 |
|---|---|---|---|---|
| போஞ்சி | 120 | 130 | 110 | 113 |
| கேரட் | 160 | 150 | 143 | 143 |
| கோவா | 60 | 70 | 60 | 60 |
| தக்காளி | 140 | 180 | 180 | 187 |
| கத்திரிக்காய் | 270 | 270 | 263 | 263 |
| பூசணி | 160 | 160 | 170 | 160 |
| புடலங்காய் | 140 | 140 | 145 | 160 |
| பச்சை மிளகாய் | 675 | 675 | 767 | 717 |
| தேசி | 105 | 110 | 120 | 103 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 500 | 478 | 477 | 467 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 490 | 420 | 400 | 420 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 85 | 85 | 90 | 96 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 145 | 140 | 140 | 147 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 98 | 110 | 101 | 99 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 495 | 493 | 493 | 490 |
| தேங்காய் (சராசரி) | 85 | 95 | 85 | 85 |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 01.02.2021 | 02.02.2021 | 03.02.2021 | 05.02.2021 |
|---|---|---|---|---|
| போஞ்சி | 145 | 115 | 115 | 95 |
| கேரட் | | 175 | 145 | 155 |
| கோவா | 55 | 65 | 55 | 60 |
| தக்காளி | 145 | 125 | 150 | 145 |
| கத்திரிக்காய் | 225 | 275 | 235 | 265 |
| பூசணி | 135 | 125 | 125 | 125 |
| புடலங்காய் | | 130 | 155 | 135 |
| பச்சை மிளகாய் | 675 | 745 | 845 | 775 |
| தேசி | 115 | 135 | 125 | 135 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 498 | | | |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 358 | 388 | 305 | 338 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 68 | 98 | 93 | 103 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | | 135 | 138 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | | | | |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | | | | |
| தேங்காய் (சராசரி) | 77 | 75 | 77 | 74 |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 01.02.2021 | 02.02.2021 | 03.02.2021 | 05.02.2021 |
|---|---|---|---|---|
| போஞ்சி | 165 | 135 | 135 | 115 |
| கேரட் | | 195 | 165 | 175 |
| கோவா | 75 | 85 | 75 | 80 |
| தக்காளி | 165 | 145 | 170 | 165 |
| கத்திரிக்காய் | 245 | 295 | 255 | 285 |
| பூசணி | 155 | 145 | 145 | 145 |
| புடலங்காய் | | 150 | 175 | 155 |
| பச்சை மிளகாய் | 695 | 765 | 865 | 795 |
| தேசி | 135 | 155 | 145 | 155 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 508 | | | |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 378 | 398 | 315 | 348 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 88 | 108 | 103 | 113 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | | 145 | 148 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | | | | |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | | | | |
| தேங்காய் (சராசரி) | 89 | 80 | 83 | 79 |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 01.02.2021 | 02.02.2021 | 03.02.2021 | 05.02.2021 |
|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 45 | 40 | 43 | 38 |
| பப்பாசி | 35 | 45 | 38 | 43 |
| அன்னாசி | 80 | 95 | 88 | 93 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 50 | 50 | 50 | 36 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 80 | 80 | 80 | 63 |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 01.02.2021 | 02.02.2021 | 03.02.2021 | 05.02.2021 |
|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 65 | 60 | 63 | 58 |
| பப்பாசி | 55 | 65 | 58 | 63 |
| அன்னாசி | 100 | 115 | 108 | 113 |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# கிழக்கில் சூட்டப்பட்ட மாலைகள்

வரதன்
(நியூஸிலாந்திலிருந்து)




“முஸ்லிம் மக்கள் தங்களது மாலைகளை தமிழ்த் தலைவர்களுக்கும், முஸ்லிம் தலைவர்களுக்கும் சூட்டியுள்ளனர். யாரும் பணிக்காமல், நெறிப்படுத்தாமல் தங்கள் விருப்பப்படியே அவர்கள் மாலையிட்டமையை அவதானிக்க முடிந்தது. ஆனால், இவர்களை இனி ஒன்றிணைந்து நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு முஸ்லிம் தலைமைகளுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் உண்டு என்பதை இந்த மாலை சூட்டல் காட்டியுள்ளது.”

‘பொத்துவிலில் தொடங்கி பொலிகண்டி வரை’ பயணிக்கும் தமிழர் எழுச்சிப் பயணத்தின் போது காத்தான்குடியில் வைத்து இந்தப் போராட்டத்தில் ஊர்வலமாக வந்தவர்கள் முஸ்லிம் மக்களால் வரவேற்கப்பட்டனர்.

இந்தப் போராட்டப் பயணம் பற்றி வடக்குக் கிழக்கின் சமூக அமைப்புகள் ஒன்றியம் அறிவித்தவுடன், தமிழ் அரசியல் கட்சிகள் என்ற வரிசையில் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகத் தனது ஆதரவைத் தெரிவித்தது.

இஸ்லாமிய மக்களும் இதில் கலந்து கொள்ளவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் கேட்டிருந்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனுடன் முஸ்லிம் காங்கிரஸும் முஸ்லிம் மக்களும் இதற்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டுமெனக் கேட்டிருந்தது.

அண்மையில் இணையக் கலந்துரையாடல் ஒன்றில் மனோ கணேசன், அசாத் சாலி, சுமந்திரன் ஆகியோர் தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்காலம் என்ற தலைப்பில் உரையாடினர். அதில் அசாத் சாலி பேசும்போது முஸ்லிம்களும் தலைமைகளும் தமிழ்மக்களுடன் இணைந்து எமது பலத்தை அவர்கள் நடத்தும் ஜனநாயகப் போராட்டங்களில் காட்டவேண்டும் எனப் பேசியிருந்தார்.

இவர்களது கோரிக்கைகள் கருத்துகளுக்கு மேலாக, நாடாளுமன்றத்தில் சாணக்கியன் முஸ்லிம் மக்களுக்காக


Wear Mask - Dialog 13:52 21%
Done Edit

Found this rare picture of Sri Ponnambalam Ramanathan being drawn in a carriage on his return to Colombo from England by D.S.Senanayake, F.R.Senanayake, E.W.Perera, A.E. Gunasinghe and D.B.Jeyatilake

Ramanathan was responsible for the release of the Sinhalese leaders who had been arrested following the 1915 Ceylonese riots, travelling to the UK to make their case.

https://en.m.wikipedia.org/wiki/Ponnambalam_Ramanathan

இறைஞ்சிப் பேசிய உரை முஸ்லிம் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் அவர் மீதான அன்பையும் மதிப்பையும் அபிமானத்தையும் புலம்பெயர் வாழ் முஸ்லிம்கள் வரையில் ஏற்படுத்தியுள்ளது.

திருக்குர்ஆனின் படி அதன் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும் இஸ்லாமிய மக்கள் தங்களது இறந்த சொந்தங்களை புதைப்பதே அவர்களது நம்பிக்கை.

இறந்த பின்னர் – உள்ள அவர்களது உரிமையும் இந்த நாட்டில் இல்லையா? என்று கேள்வி எழுப்பிய அவர் அரசாங்கத்தை ஆதரிக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கண்டித்தார். அப்பாவி முஸ்லிம் மக்களின் உரிமை” என அவர் பேசியமை முழு முஸ்லிம் சமூகத்தையுமே நாட்டிலும் வெளியிலும் அவரைத் தங்களது ஒருவராக உரிமை கொள்ள வைத்துள்ளது என்பதை நாம் கண்ணூடாகக் கண்டுள்ளோம்.

ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன், சில ஆண்டுகளுக்கு முன்னர் முஸ்லிம் காங்கிரஸின் வைபவம் ஒன்றில் பேசும் போது, வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை பற்றிக் குறிப்பிட்ட கருத்தும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அவர் மீதான ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்தது. தமிழரசியலிலும் அவரது அந்த உரை முக்கியமாயிற்று.

பின்னர், சுமந்திரன் நாடாளுமன்றத்தில் முஸ்லிம்களின் ஜனாஸா விவகாரம் தொடர்பாகவும், கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணியான ரிஷாஜ் பதியுதீன் தொடர்பாகவும் ஆற்றிய உரை கூட முஸ்லிம்கள் மத்தியில் பரவலாகச் சிலாகிக்கப்பட்டு வந்தமையை அவதானிக்க முடிந்தது.

இதைவிட, ஜனாஸா தொடர்பான சட்டச் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருந்தமையும் தங்கள் தலைவர்களும் தளம்பும் அரசியல், கள சூழ்நிலையில் தங்களது சமய அனுட்டான விடயத்தில் தமிழ்த் தலைவரான அவர் உதவுவதை பெரியதோர் மதக் காரியமாகவே அவர்கள் பார்க்கின்றனர்.

அண்மையில் சுமந்திரன் ஆஸ்ரேலிய ஏபிசி தொலைக்காட்சிக்கு ஜனாஸா தொடர்பாக வழங்கிய செவ்வியும் இஸ்லாமிய மக்கள் மத்தியில் நல்ல வகிபாகத்தை தமிழர் அரசியலில் ஏற்படுத்தியுள்ளது.

எனது இஸ்லாமிய நண்பர் ஒருவர் எதற்கு எடுத்தாலும் குர் ஆனில் இப்படிச் சொல்லியுள்ளது – என விளக்குவார். அவர் இந்தப் பேட்டி பற்றிப் பேசும்போது எமது தலைவர்களால் பேச முடியாத நிலையில் அல்லாஹ் எமக்காகத் தந்தவர் இந்த சுமந்திரன் என்றார்.

தொண்ணூறுகளில் ஆனையிறவு தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை காலி வீதியில் மணிக்கொரு தடவையாக அம்புலன்ஸ் வண்டிகள் போய்க் கொண்டிருந்தன. அவ்வேளை மறைந்த சட்டர்டே ரிவியூ ஆசிரியர் காமினி நவரட்ணவுடன் நண்பர் குகமூர்த்தியும் நானும் ஹோட்டல் சபையரில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அந்த ஹோட்டலில் திருமணம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரமாண்டமான செலவில் அது இடம்பெற்றதை அங்கிருந்து பார்க்க முடிந்தது. அது ஒரு முஸ்லிம் தனவந்தரின் மகளின் திருமணம்.

எம்முடன் இருந்த காமினி நவரட்ண கதையிடையே இன்ஷா அல்லாஹ் என்றார்.

குகமூர்த்தி சிரித்துவிட்டு அவரும் இன்ஷா அல்லாஹ் எனச் சொல்ல, காமினி இப்போ இலங்கையில் அல்லாஹ் தான் உள்ளார், புத்தரும் சிவாவும் இல்லை என்றார் பகிடியாக.

எனது இஸ்லாமிய நண்பர் அல்லாவின் அருள்தான் காரணம் என்று சொன்ன போது எனக்கு காமினி நவரட்ண அவர்கள் சொன்ன அல்லாஹ் நினைவுக்கு வந்தார்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இன்றுள்ள அரசியற் சூழ்நிலையில் மதிப்புடன் தெரிந்தவர்கள் இவர்கள் மட்டுமே.

ஆனால், அறுபத்தொன்பதில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முஸ்லிம்கள் சுடப்பட்டபோது, அவர்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவர் தந்தை செல்வநாயகம்.

எழுபதுகளில் புத்தளம் பெரிய பள்ளிவாசலில் முஸ்லிம்கள் பொலிஸாரால் ஈவிரக்கமற்றுச் சுடப்பட்டபோது, அவர்களுக்காக கேள்வி கேட்டவர்கள் செல்வநாயகம், தர்மலிங்கம்.

எண்பதுகளில் மாத்தறையில் ஒரு முஸ்லிம் கிராமமே (பெயர் உடன் நினைவுக்கு வருவதாயில்லை) இடம்பெய



ரவைக்கப்பட்ட போது அதனை ஓர் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டுமென்று பேசியவர் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த அமிர்தலிங்கம்.

காலங்கள் மாறி, போர்ச்சூழல் தொடங்கி இரு சமூகமும் வெட்கப்படவேண்டிய பல அனர்த்தங்கள் நிகழ்ந்த பின்னர் கூட, வடக்கு முஸ்லிம்கள் எப்போது அங்கு செல்கிறார்களோ அப்போதே நான் எனது ஊருக்குப் போவேன் எனச் சொன்ன சிவ சிதம்பரம் ஆகியோரைத் தெரியாது. குறிப்பாக இன்றைய (சமூக ஊடக) இஸ்லாமிய இளையோர்க்குத் தெரிய நியாயமில்லை.

பின் வந்த இனக்குரோத, முரண்பாட்டுச் சூழல்கள் நிகழ்வுகள் அந்த நினைவுகளின் நிழல்களையே அழித்துவிட்டன.



அத்தகைய நிகழ்வுகளின் வடுக்களில் உச்சமாக அமைந்த ஒன்றுதான் தொண்ணூறுகளில் இடம்பெற்ற காத்தான்குடி பள்ளிவாசல் சம்பவம் ஆகும்.

காத்தான்குடிப் பள்ளிவாசல் சோக நிகழ்வு பற்றி அறிந்த எம்மவர்களுக்குத் தெரிந்த வகையில், வடக்கைச் சேர்ந்தவன் – குறிப்பாக வடமராட்சியைச் சேர்ந்தவன் என்ற வகையில், அன்றைய தினம் சுமந்திரன் அவர்களை அந்த மக்கள் வரவேற்கும் போது எனது கண்கள் பனித்தன.

காலங்கள் எப்படி மாறுகின்றன என்பதை மட்டுமே என்னால் இங்கு குறிப்பிட முடியும்.

தமிழர்களின் இந்து ஆலயம் பற்றி, அதை அகற்றிய தமது கைங்கரியம் பற்றி, முஸ்லிம் அரசியற் தலைவர் ஒருவர் பேசிய உரை ஒன்று சமூக வலைத்தளங்களில் – குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் – கடந்த வருடங்களில் உலவியதைப் பலரும் அறிவர்.

அந்த உரையைக் கூட அவர் இந்தக் காத்தான்குடி நகரிலேயே ஆற்றப்பட்டதாகப் பேசப்பட்டது.

அந்தக் காத்தான்குடியிலேயே முஸ்லிம் மக்கள் பாதயாத்திரை வந்தவர்களை வரவேற்கும்போது மாலை சூட்டித் தம் அன்பைக் காட்டி வரவேற்றுள்ளனர்.

வந்து பங்குபற்றி ஒத்துழையுங்கள் என்று கேட்கப்பட்ட மக்கள் மாலைகளுடன் வந்து இணைந்தமை என்பது அரசியல் வரலாற்றிலேயே முக்கியமான தடம் பதிக்கும் நிகழ்வாகும்.

மாலைகள் என்பவை மகிழ்ச்சி , வரவேற்பு என்பனவற்றின் அடையாளமாகப் பாவிக்கப்படுபவை. திருமணத்தில் மாணவாளனும் மணவாட்டியும் ஒருவருக்கொருவர் சூட்டி ஒரு நீண்ட உறவுப் பந்தத்தில் இணைவுறும் அடையாளமாகும்.

இங்கு முஸ்லிம் மக்கள் தங்களது மாலைகளை தமிழ்த் தலைவர்களுக்கும், முஸ்லிம் தலைவர்களுக்கும் சூட்டியுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்பேசும் சமூகத்தின் வீறுகொண்ட பேரெழுச்சி!

























பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிக் கான மாபெரும் பேரணி, நான்காம் நாளான நேற்று வவுனியாவிலிருந்து மன்னாரைச் சென்றடைந்தது. இதில் பெருந்திரளான தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் பங்கேற்றனர்.



# கஷ்டங்களை சோதனைகள் ஆக எடுக்காதீர்கள்!!

வாழ்வில் நாம் எதிர்கொண்ட கஷ்டங்களை சோதனைகள் ஆக எடுக்காமல் முன்னேற்றத்திற்கான தேர்வுகளாக கருதி எதிர்கொண்டால் அது எமக்கு மன அமைதி மட்டுமல்ல உயர்வையும் கொடுக்கும்.

மனதின் சமநிலையைக் கொண்டுவர யோகப் பயிற்சிகள் மட்டுமல்ல தியானப் பயிற்சியும், சூட்சும உடல்களின் சமநிலையும் வேண்டும் என்பது ஒரு சிறந்த பாடம்.

30 வயதுக்கு மேல் உடல் ஆரோக்கியம் தேவை என்றால் தினசரி உடற்பயிற்சி அவசியம்.

மனிதனின் வாழ்க்கையில் திரும்ப கிடைக்காத ஒரு பொக்கிஷம் நேரம். அதை சேமித்து அனுபவிக்க நாம் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆடம்பரம், பிறர் என்ன நினைப்பார்களோ என்ற கவலை – எப்போதும் உங்களுக்கு வேண்டாம்.

ஒரு மனிதனின் முன்னேற்றத்தில் பல மனிதர்கள் உதவி அவசியம் என்பதை எப்போது உங்கள் வாழ்க்கையில் உணர்ந்துகொள்கிறீர்களோ அப்போதே நீங்கள் பொது வெளிக்கு வருகிறீர்கள்.

எல்லோருக்கும் உதவி செய்யும் வாய்ப்பும் வசதியும் உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் என்னால் ஒருவரும் துன்பம் அடையக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருங்கள்.

மனித வாழ்க்கை எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் எண்ணங்களால் மட்டும் ஆனது. அதில் எல்லா நேரமும் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் நமக்கு நடக்கும் விடயங்களை பக்குவமாக ஆராய்ந்து ஏற்றுக்கொண்டு அமைதியான மன நிலையோடு வாழ ஒவ்வொரு நாளும் முயற்சி செய்யவேண்டும்.

# வேலைக்கு போனால்தான் சாப்பாடு என்பது உண்மைதானா?



வேலைக்கு போனால்தான் சாப்பாடு என்ற விடயமே சில ஆயிரம் வருடத்துக்கு முன்தான் ஆரம்பித்த ஒன்று. மனிதன் முதன் முதலில் தோன்றிய போது அதாவது பல பரிணாமத்திற்குப் பிறகு இப்போ இருக்கக் கூடிய மனித இனமாக மாறியபோது அவன் உணவுக்காக வேலைக்கு போகவில்லை.

பசிக்கும் போது கண்ணில் கண்ட விலங்குகளை வேட்டையாடி உண்டு வந்தான். கற்கால மனிதனுக்கு இரண்டே தேவைகள்தான் இருந்தன. ஒன்று உணவு. இன்னொன்று உடலுறவு. இது இரண்டும் அவனுக்கு வேண்டிய போதெல்லாம் தாராளமாகக் கிடைத்தன. இதனால் அவன் ராஜா போல் வாழ்ந்து வந்தான்.

ஆனால் காலப்போக்கில் மனிதன் நாடோடி வாழ்க்கை முறையில் இருந்து விலகி ஆற்றுக்குப் பக்கத்தில் தங்குமிடம் அமைத்து, விவசாயம் செய்து, ஒரு சமூகமாகக் கூடி வாழ ஆரம்பித்தான். அப்போதுதான் நூறு பேர் வாழும் இடத்தில் ஒருவன் அவர்களைத் தன் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என நினைக்கிறான். அந்த இடத்தில் தான் அதிகாரப்போட்டி தொடங்குகிறது.

இத்தனை நாள் சுதந்திரமாக சுற்றி வந்தவனை திடீரென்று எனக்கு நீ கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று சொன்னால் கேட்பதற்கு தயாராக யாரும் இருக்கவில்லை .

அதனால் அவனுக்கு தேவையானவொன்றை கட்டுப்படுத்தினால் தான் அவன் நம் கட்டுப்பாட்டின் கீழ் வருவான் என்று திட்டம் போட்டனர்.

மனிதனுக்கு அவசியமானது என்ன, உணவும் உடலுறவும்தானே. அது அவனுக்கு எளிதில் கிடைக்காதவாறு செய்யவே ஏற்படுத்தப்பட்டது வேலை முறை.


அதாவது இந்த வேலையை நீ செய்தால் தான் உனக்கு சாப்பாடு என்று மாற்றினார்கள். அதே போல வேண்டும் போதெல்லாம் தாராளமாக கிடைத்த உடலுறவையும், சமுதாயம், திருமணம், இத்தனை வயது வந்தால்தான் அனுமதி, ஒருவனுக்கு ஒருத்தி என்றெல்லாம் சொல்லி கட்டுப்படுத்தினார்கள்.

அப்போது ஆரம்பித்ததுதான் இன்று நாம் வாழும் வாழ்க்கை முறையில் வந்து நிற்கிறது. சுதந்திரமாக சுற்றிய நம்மை பணத்தைத் தேடி ஓட வைத்து விட்டார்கள். சும்மா கிடந்த நிலங்களை பங்குபோட்டுக் கொண்டு இன்று அது உன் நிலம், இது என் நிலம் என்று உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

நீங்கள் உங்களது கனவு வேலை, அல்லது உங்களுக்கு மிகவும் பிடித்த ஒரு வேலையையே தொடர்ந்து செய்யும் போது உங்களுக்கு சலிப்பு ஏற்படத் தான் செய்யும். உதாரணமாக, உங்களுக்கு போட்டோகிராபியில் மிகுந்த ஆர்வம் என்றாலும் அதை உங்கள் மன திருப்திக்காக செய்யும் பொழுதுதான் உங்களுக்கு சந்தோசம் கொடுக்கும். அதையே பணம் சம்பாதிக்கும் நோக்கில் வேலையாக செய்யும் போது எரிச்சல் ஏற்படத்தான் செய்யும்.

அதற்காகத் தான் ஒரு நாள் விடுமுறை , பொழுது போக்கு, குடும்பம் என்று வேலைக்கு நடுவே சிறிது ஆறுதல் அடைந்து கொள்கிறோம். இல்லையென்றால் என்றோ பைத்தியம் ஆகியிருப்போம்.

# வாழ்க்கையில் மிகச் சிறந்த வெற்றி பெறுபவர்கள் என்னவெல்லாம் செய்ய மாட்டார்கள்!



தொகுப்பு - ப்ரியமதா பயஸ்

*வாழ்க்கையில வெற்றி பெற்ற எல்லோரும் என்ன செய்யமாட்டார்கள் என்றால் அவர்கள் எப்படி வெற்றி பெற்றார்கள் என்பதை சொல்லவே மாட்டார்கள்.*

*தங்கள் வாழ்க்கையில் சாதித்தவர்களின் பேட்டியோ, புத்தகமோ, வரலாறோ படித்து பாருங்கள். அவர்கள் சொல்வது எல்லாமே எங்கள் வெற்றிக்கு காரணம் கடின உழைப்புதான் என்பார்கள். ஆனால் கடுமையாக உழைக்கும் எல்லோருமே வெற்றி பெற்றதாக இல்லையே. அப்போது எப்படி?*

*ஏதோ ஒரு அறிவு ரீதியான சூழ்ச்சி வெற்றிக்கு இருக்கிறது. அதை கண்டுபிடிக்க வெற்றியை நோக்கி நடவுங்கள்.*



# அறிவைத் தேடி ஓடி என்ன செய்ய போகிறோம்?

அறிவைத் தேடி ஓடி என்ன செய்யப் போகிறோம்? அறிவை வைத்து பணம் சம்பாதிக்கதானே முயற்சி செய்யப் போறோம்.

யாரும் யாரையும் சிறப்பாக நினைத்துக்கொள்ளவும் வேண்டாம். யாரும் யாரையும் சிறப்பா காட்டிக்கொள்ளவும் வேண்டாம்.

நாம் எல்லோருமே, அவன் போல ஆகவேண்டும், இவன் ஆகவேண்டும் என்றுதான் ஆசைப்படுறோம். நாம் எல்லோரும் மனித பிறவிகள். இதில் என்ன அவனைப்போல நான் ஆவதும் என்னைப்போல அவன் ஆவதும்?

அவனவனுக்குத் தேவையானதை நோக்கி ஓடிக்கொண்டே இருக்கிறோம். அவ்வளவுதான். இதில் பணத்தை நோக்கி ஓடுவதும் தவறு இல்லை. அறிவை வளர்த்து சிறந்த அறிவாளியாக மாறுவதும் தவறு இல்லை.

நீங்கள் நிம்மதியாக வாழ வேண்டும் எனில் இந்த செல்போன், டிவி இரண்டயும் உங்களிடம் இருந்து சற்று விலக்கி வையுங்கள். இதன் மூலமாக 90 சதவிகிதம் உங்களுடைய நிம்மதி திரும்பவும் கிடைக்கும்.

நாம் அளவுக்குமீறி எதிர்பார்க்கும் விடயங்கள் தான், எமக்கு அழுத்தத்தையும் தேவையில்லாத மன உளைச்சல்களையும் தூண்டிவிடுகின்றன.

# மன்னார் மறைமாவட்டத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி கலந்து சிறப்பிப்பு!

## புனித யோசவ் ஒய்வுநிலை குருக்கள் இல்லத்தையும் திறந்து வைத்தார்

மன்னார் மறைமாவட்டத்தின் 40ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு கலாநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை 29 ஜனவரி 2021 அன்று மன்னாருக்கு விஜயம் செய்தார்.

மன்னார் நகரை வந்தடைந்த அவர் மன்னார் நகர பகுதியில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச் சொரூபத்தின் முன் செபித்தார்.

பின்னர் திருத்தந்தையின் பிரதிநிதியை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அ. விக்டர் சோசை அடிகளார், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மெல், மன்னார் நகர முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் வரவேற்றனர்.

திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆகியோர் மன்னார் நகரப் பகுதியில் இருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் வரை திறந்த வாகனத்தில் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டு மன்னார் பேராலயத்தில் திருப்பலியும் நற்கருனை ஆசீரும் இடம் பெற்றன.



30 ஜனவரி 2021 அன்று மன்னார் மறைமாவட்டத்தின் 40ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத் திருப்பலி திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு கலாநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் ஆகியோர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவில் அப்போஸ்தலிக்க ஆசீரும் மன்னார் மறைமாவட்டத்தின் பாதுகாவலி மருதமடு அன்னையின் திருச்சுருப ஆசீரும் வழங்கப்பட்டன.

மன்னார் மறைமாவட்டத்தின் 40ஆவது ஆண்டு நிறை வுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட வரலாற்று குறிப்பேடு என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான வெளியீட்டு உரையை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் வழங்கினார். நூலினை திருத்தந்தையின் பிரதிநிதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோகராதலிங்கம், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்டான்லி டிமெல்,மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.பிறெட்லி ஆகியோருக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் வழங்கினார்.

அன்று காலை 11 மணிக்கு திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு கலாநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை புனித யோசவ் ஓய்வுநிலை குருக்கள் இல்லத்தையும் திறந்து வைத்தார். சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் முதல் இயக்குநர் அமரர் அவிதப்பர் அடிகளாரின் நினை வாக இவ் இல்லம் உருவாக தற்போதைய ஆன்மீக இயக்குனர் டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

**(தகவல்: மன்னார் கதலிக் மீடியா)**

## இறைவனே இந்த உலகைக் காப்பான் அந்நம்பிக்கை மட்டும் வாழ வைக்கிறது



திருப்பதியும் காசியும்
மெக்காவும் வத்திக்கானும்
வற்றிப்போயின வரவின்றி.
இறைவனே இந்த உலகை காப்பான்
என்ற நம்பிக்கை மட்டும் வாழ வைக்கிறது.

இயற்கையின் சுழற்சியில்
இந்தப் பிரபஞ்சம்
தொடர்ந்து புதுமைகளை
பிரசவிக்கிறது
கிருமிகளின் ஆதிக்கத்தில்
பழைமையை சிதைத்து
புதுமைக்கு பாலம் வகுக்கிறது.
வாழ்வின் கட்டத்தில்
மாற்ற முடியாது மனித குலம் திணறிய
பிற்போக்குகள்
உணர்வுகளின் நோக்கில் – மீண்டும்
முற்போக்கி செல்கிறது.
மாற்றங்களுக்கும் மாற்றம் வந்தது.
மனதிலும் மண்ணிலும்
உறவுகளும் ....தூரத்தில்
சமூகமும்....இடைவெளிகளின்பாதுகாப்பில்.

வாழ்வுக்கு கவசம்
முக கவசம் என்றாயிற்று.
தனித்திருத்தலே
நோய்க்கு பத்தியமாயிற்று.
மிளகும் மஞ்சளும் இஞ்சியும்
துஞ்சுவோருக்கு துரித நிவாரணியாயின.
மூச்சு விட்டாலே போதும்
முழுதாய் ஒரு நாள் கழிந்தாலே மகிழ்ச்சி
வாழ்க்கை எதிர்பார்ப்புகள் இன்றி
வரம்புகளை நிரவி நிறைக்கின்றது
திருப்பதியும் காசியும்
மெக்காவும் வத்திக்கானும்
வற்றிப்போயின வரவின்றி.
பிரார்த்தனைகள் ஆத்மாவை நோக்கி
பிறந்தன
மதியால் முடியாத முடிச்சுகளை
விதி இயற்கையுடன் சேர்ந்து அவிழ்த்தது.
உலகம் கலகங்களில் நின்று விலகி
கலக்கத்தில் சுழல்கிறது.
போரையும் பேரையும் மறந்து
யாரை காப்பாற்றுவது என்று திணறுகிறது.
காற்றை அசுத்தமாக்கியதற்கு
காற்றிலிருந்தே சாபம் கிடைத்தது.
தடுப்பூசி கொண்டுவரும் நம்பிக்கையும்
விடுப்புகளின் விசனத்தில் மங்குகிறது.
இனி ஒரு விதியும் செய்ய வேண்டாம்
இறைவனே இந்த உலகை காப்பான்
என்ற நம்பிக்கை மட்டும் வாழ வைக்கிறது.
அடுத்து வரும் காலங்களில்
மனிதகுலம் இயற்கையை
மதித்தால் மறுவாழ்வு உண்டு ...
நம்பிக்கையுடன்

**- ரவி அமிர்தன்**

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

## மில்பர் வாஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் அன்பிய ஆண்டு அங்குரார்ப்பண நிகழ்வு






யாழ் மறைமாவட்டத்தில் இவ்வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அன்பிய ஆண்டை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநரான கிளறீசியன் சபை மில்பர் வாஸ் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் 17 ஜனவரி 2021 அன்று புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் தலைமையில் நடைபெற்ற திருப்பலியுடன் இடம்பெற்றது.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அன்பிய கொடியேற்றத்தைத் தொடர்ந்து அன்பிய ஆணைக்குழு இயக்குநர் மில்பர் வாஸ் அடிகளாரினால் அன்பிய ஆண்டின் இலட்சினைக்கான விளக்கம் கொடுக்கப்பட்டது.

அவர் அவ்விளக்கத்தில் –

வலது பக்கத்தில் காணப்படுகின்ற முதலாவது இலச்சினை இலங்கை தேசிய குழுவால் தயாரிக்கப்பட்ட பொதுவான இலச்சினையாகும். ஏஸ்.சி.சி. என்ற ஆங்கில எழுத்துக்கள் அன்பியங்களைக் குறித்து நிற்கிறது. புனித யோசவ்வாஸ் சிறிய கிறிஸ்தவ குழுமங்களாக நாம் வாழ ஓர் எடுத்துக்காட்டாக இருப்பதையும் அவரது மறைபரப்பு வடிவமே சிறிய கிறிஸ்தவ குழுமங்களை அமைத்து பொதுநிலையினர் குழுமத்தை உருவாக்கி இலங்கையை ஒரு திரு அவையாக வளர்த்தெடுத்ததை எடுத்துக்காட்டுகிறது. நடுவில் இருக்கும் புனித சூசையப்பர் படம் உலகத்திரு அவையில் நினைவு கூரப்படுகின்ற புனித சூசையப்பர் ஆண்டை நினைவுபடுத்துகின்றது. – என்றார்.

பின்னர் அன்பிய இணைப்பாளர்கள் – ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

## சமூக உறவைப் பலமாக்கி அதன் மூலம் சமூக மறுமலர்ச்சியின் பங்காளாராவோம்

### கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அழைப்பு

கியூடெக் கரித்தாஸ் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டு சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சுழற்சி முறைக் கடன் திட்டத்தின் கீழ் கொழும்புத்துறை உதயபுரம் சமூக மட்ட கலந்துரையாடல் குழுவினருக்கு கடனுதவிகள் 20 பயனாளிகளுக்கு இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரினால் வழங்கப்பட்டது.

இயக்குநர் தமது உரையில் –

ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டில் இணையும் ஒவ்வொருவரது சுயமுயற்சிகளும் தாம் வாழும் பகுதிகளில் வாழ்வாதார சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுடன் சமூக உறவை பலமாக்க வேண்டும். அதுவே இத் திட்டங்களின் நோக்கமாகும். சிறு சிறு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பதன் மூலம் தன்னம்பிக்கையும்



தாராள முயற்சிகளுக்கும் பலரின் ஒத்துழைப்புக்கள் கிட்டும் என்பதனை உங்கள் முயற்சிகளே முன்னுதாரணமாகும். பயிற்சிகளும் முயற்சிகளும் தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதுடன் வாழ்வாதார முன்னேற்றத்திலும் எமது வளங்களை பயன்படுத்துவதில் ஒன்றிணைந்த சமூக மேம்பட்டை வலுவாக்குவோம்.– என்றார்.

# கிளிநொச்சி வலயம் இரண்டாகப் பிரிப்பு; கல்வி அமைச்சின் அனுமதி ஆளுநரிடம்!



கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாக பிரிப்பதற்கான கல்வி அமைச்சின் எழுத்து மூலமான அனுமதியை வட மாகாண ஆளுநரிடம் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கடந்த வெள்ளிக்கிழமை கையளித்துள்ளார்.

யாழ்பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தின் ஆய்வு பயிற்சி கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் வட மாகாண ஆளுநரிடம் இதற்கான அனுமதிக் கடிதத்தையும் கையளித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் கிளிநொச்சி கல்வி வலயம் என இதுவரை காலமும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை என நான்கு கோட்டக்கல்வி பிரிவுகளாக 104 பாடசாலைகளுடன் 32 ஆயிரத்து 28 மாணவர்கள் 2 ஆயிரத்து 35 ஆசிரியர்கள் 28 உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் என இயங்கி வருகிறது.

எனவே, கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் மாவட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், தற்போது மத்திய கல்வி அமைச்சின் அனுமதியும் கிடைத்துள்ளது.

இனி அந்த அனுமதியுடன் அமைச்சரவைக்கு விடயம் கொண்டு செல்லப்பட்டு, அங்கும் அனுமதி பெறப்பட்ட பின்னர் வலயப் பிரிப்புக்கான பணிகள் உத்தியோக பூர்வமாக முன்னெடுக்கப்படும் எனவும் கிளிநொச்சி கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

அத்தோடு கரைச்சி பூநகரி ஒரு வலயமாகவும், பளை, கண்டாவளை ஒரு வலயமாகவும் இரண்டு வலயங்கள் உருவாகவுள்ளன.

## பொத்துவில் - பொலிகண்டி பேரணியால் மக்களுக்கு எந்த இலாபமும் கிடையாது!

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையாக பேரெழுச்சிப் பேரணி, சுயலாப நோக்கத்துக்காக இடமபெறுகிறது எனவும் இதனால் எதுவும் நடக்க போவதில்லை என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்கான முயற்சியே இது என்றும் குற்றம் சாட்டினார்.

மேலும் இந்தப் பேரணி மூலம் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அத்தோடு கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படும் காணிகளை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தண்டிக்கவோ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

யார்,யார் ஆவணங்களில் ஒப்பமிடுவது, இனப்படுகொலையை ஆவணத்தில் நீக்க முனைந்தவர் யார், ஆரம்பத்திலிருந்து இனப்படுகொலையை எதிர்த்து வந்தவர் இறுதியில் எவ்வாறு ஏற்று ஒப்பமிட்டார், சர்வஜன வாக்கெடுப்பை விரும்பாதவர் யார் என்ற பட்டிமன்றம் தாயகத் தமிழ் தொலைக்காட்சிகளிலும், அலைவுத் தமிழரின் வானொலிகளிலும் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இவை ஆரோக்கியமானவையாக அமையவில்லை. கட்டாய தேவையை ஒட்டி உருவான ஒற்றுமையை சிதறடிக் கும் சில்லறைத்தனமே இங்கு காணப்படுகிறது. இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி மூன்று வெவ்வேறு ஆவணங்களை சர்வதேச சமூகத்துக்கு அனுப்புவதாக முக்கூட்டு அணியினால் தீர்மானிக்கப்பட்டதென்றும், அதில் ஒன்று மட்டுமே இதுவரை அனுப்பப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையிலிருந்து இவ்விடயத்தை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்கு பாரப்படுத்தும் கோரிக்கையை மையப்படுத்தும் அடுத்த இரண்டு கடிதங்களும் இதுவரை அனுப்பப்படாமைக்கு காரணமென்ன?

சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பும், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டணியுமே இதில் பின்னடிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்து வருவது உண்மையா?

இவைகளைப் பார்க்கும்போது முக்கூட்டு ஒற்றுமை என்பது பொறிப்பந்தலா கவே தோற்றம் தருகிறது. முதுமையில் ஞாபக மறதியுடன் தள்ளாடும் தலைவர் சம்பந்தன், சில மாதங்களுக்கு முன்னர் ஞாபக சக்தியில் தெரிவித்த ஒரு விடயத்தை இங்கு நினைவூட்டுவது அவசியமாகிறது.

'போர் நடைபெற்ற வேளையில் மூன்று பிரதான நாடுகளின் தூதுவர்கள் என்னிடம் வந்து, இப்போது புலிகளை அழிக்க வேண்டியுள்ளது. அது முடியும்வரை எதுவுமே பேசாதிருங்கள். அந்த வேலை முடிந்த பின்னர் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் தீர்வை பெற்றுத்தருவோம் என்றார்கள். பத்து வருடங்கள் தாண்டிவிட்டது. அவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டனர் என்ற சம்பந்தனின் வாய்முறைப்பாடு அவருக்கே சமர்ப்பணம்.

நன்றி: 'பதிவு' இணையம்

# காஷ்மீர் மக்களுக்கு நீதி கேட்டு கொழும்பில் நேற்று போராட்டம்!






காஸ்மீர் மக்களுக்கு நீதி கேட்டு கொழும்பில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான காரியாலய முன்றிலில் போராட்டம் இடம்பெற்றது.

பிரபல சமூக செயற்பாட்டாளரும் காஸ்மிருக்கான குரல்கள் அமைப்பின் தலைவருமான மிப்ளால் மௌலவியின் தலைமையில் அடையாளப் போராட்டமும் மகஜர் கையளிப்பும் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா. காரியாலய முன்றிலில் நடைபெற்றது.

கஷ்மீரில் வாழும் மக்களுக்கும் உணர்வுகளும் உரிமைகளும் இருக்கிறது. அவர்களின் உடலில் ஓடும் இரத்தமும் சிவப்பே. அங்கு துயரில் வாழும் மக்களுக்கு சர்வதேச அமைப்புக்கள் தலையிட்டு நீதி பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் எனும் கோரிக்கைகளுடன் சுலோகங்களையும், இலங்கை தேசியக் கொடியையும் ஏந்தி சமூக இடைவெளிகளை பேணி நடைபெற்ற இந்த அடையாளப் போராட்டத்தின் பின்னர் ஐ.நா. காரியாலய அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்திலும் இது தொடர்பிலான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இந்த அடையாளப் போராட்டத்தில் சமூக நல செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சொர்க்கம் திருமண சேவை

மணமகன் விபரம்

பிறந்த திகதி - 1983.10.13 மதம் - இந்து
ஜாதி - கோவியர் நட்சத்திரம் - பூராடம்
தகைமை - Civil Engineering
தொழில் - Civil Engineer in London
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 19885.08.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ்/சூரி - 8இல்
நட்சத்திரம் - பூரட்டாதி 3 ஆம் பாதம்
தொழில் - கனடாவில் சொந்தத் தொழில்
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1993.08.06 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 8 இல்
நட்சத்திரம் - உத்திரட்டாதி
தகைமை - Engineering
தொழில் -Marine Engineer
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1988.10.13 மதம் - இந்து
ஜாதி - குருகுலம்
தகைமை - Machanical Engineering
நட்சத்திரம் - விசாகம் 1 ஆம் பாதம்
தொழில் - Engineer in Singapore
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

மணமகள் விபரம்

பிறந்த திகதி - 1986.08.27 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 08 இல்
நட்சத்திரம் - கார்த்திகை 2ம் பாதம்
தகைமை - M.B.B.S
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - அரச பல்கலைக்கழக பட்டம் பெற்ற மணமகன்.

பிறந்த திகதி - 1992.12.24 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - மூலம்
தகைமை - B.com, B.sc
தொழில் - Hospital Reception Canada
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த நற்குணமான மணமகன்

பிறந்த திகதி - 1991.01.08 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - சித்திரை 3ம் பாதம்
தொழில் - கனடாவில் வேலை
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய மணமகன்.

பிறந்த திகதி - 1992.12.10 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் செவ் -7 இல்
நட்சத்திரம் - மிருகசீரிடம்
தகைமை - Bachelor of Law
தொழில் - லண்டனில்
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்.

102/A பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். www.sorkham.com
தொடர்புக்கு - 0014166661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515

காலைக்கதிர் Kalaikkathir

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரை .....



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேசம் நீதியை பெற்றுதரவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்கு வடக்கு கிழக்கு தமிழ் அமைப்புகள் ஓரணியில் இணைந்து கையொப்பம் இட்டு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற கோரியும் அந்த கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் திட்டமிட்ட மேற்படி போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கில் உள்ள சிவில் அமைப்புக்கள், பல்சமய ஒன்றியங்கள், அரசியல் கட்சிகள் என அனைவரது ஆதரவையும் அவர்கள் கோரி நின்றனர்.

**கூட்டமைப்பு வரவேற்பு**

இந்த அழைப்பிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது ஆதரவை தெரிவிப்பதாக கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உடனடியாக அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பில் -

தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுவரும் நிலையில் திணைக்களங்கள் ரீதியிலான ஆக்கிரமிப்பும் தொடர்வதனை வெளிக்கொணரும் வகையில் வடக்கு, கிழக்கில் செயற்படும் சிவில் அமைப்புக்கள் பல இணைந்து விடுத்துள்ள அழைப்பிற்கு வலுச் சேர்க்கும் வகையில் கூட்டமைப்பும் தனது முழு ஆதரவை வழங்குகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய குறுகிய கால ஏற்பாட்டில் ஒழுங்குகள் இடம்பெற பொலிஸாரும் புலனாய்வாளர்களும் வேகமாக செயல்பட்டு ஒவ்வொரு நீதிமன்றம் ஊடாகவும் தடை பெறும் படலம் ஆரம்பிக்கப்பட்டது. இருந்த போதும் இரு நீதிமன்றங்கள் தடை வழங்க மறுக்க ஒரு நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவை மீளப்பெற்றது.

இதேநேரம் 3 ஆம் திகதி போராட்டம் ஆரம்பிக்கும்போது பல சந்தேகங்கள், பல ஐயங்கள் காணப்பட்டபோதும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் துணிச்சல் மெச்சப்பட்டு அணிகள் பலமாகின. இதேநேரம் சாணக்கியனின் அருகில் அரசியல் மற்றும் சட்ட சாணக்கியர் அருகில் இருந்தமை மேலும் பலமாகப் பார்க்கப்பட்டதோடு அரசியலில் இரு துருவங்கள் என கருதப்பட்ட கூட்டமைப்பு, முன்னணிக் கட்சிகளும் ஒருங்கிணைந்து பங்கு கொண்டன. இதனையடுத்து ஏனைய கட்சிகளும் உடனடியாக பங்கு கொண்டமை மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

இக் காலப்பகுதியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று கூடும் காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள், முஸ்லிம் இளைஞர்களும் அதிகளவில் இணைந்தனர். இவற்றினை எல்லாம் பொறுக்க முடியாத சிங்கள தேசம் எந்த வகையில் எல்லாம் வீதிகளில் தடையை போட முடியுமோ அந்தளவிற்கு தடைகளைப்போட்டதோடு ஆணிகளையும் போடத்தவறவில்லை. தடைகளை உத்தியாலும் தடைக் கற்களை புத்தியாலும் தகர்த்து முன்னேறும் பேரணி யாழ்ப்பாணத்தை நெருங்கி வர ஆதரவு பெருகிய வண்ணம் உள்ளதைக் கண்டு ஆரம்பத்தில் ஒதுங்கியிருந்தவர்களும் ஓடிச் செல்கின்றனர்.

இதேநேரம் யாழ் நகரை இன்று பேரணி அடையும்போது கட்டுப்படுத்த முடியாத அளவு மக்கள் அலை இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் பொலிகண்டிக்குள் - அதாவது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைப் பரப்பிற்குள் பேரணிக்குத் தடை உத்தரவு இருப்பதால் அங்கு அது நுழையப்போவது எப்படி என்ற கேள்வியே எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது. இதற்கான மாற்று ஏற்பாடுகளும் தீவிரமாக சிந்திக்கப்படுகின்றன. அதனால் இன்று பருத்தித்துறை நீதிமன்ற ஆரம்ப எல்லையில் அது நிறுத்தப்பட்டு நாளை காலை மூத்த சட்டத்தரணிகள் நீதிமன்றின் தடை உத்தரவை இரத்து செய்ய விண்ணப்பித்து அனுமதி பெற்று நாளை உட்புகுவது. அல்லது வேறு மாற்று வழிகள் தொடர்பில் ஆராயப்படுகின்றது.

இந்தப் பேரணியில் இணைந்த அனைத்து சமூகங்கள், கட்சிகள், இனங்கள் இடையே சில கசப்புகள் இருந்தாலும் அவற்றை மறந்து இந்த நல்முயற்சியில் அனைவரும் தொடர்ந்து ஒன்றித்துப் பயணிக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பாகவுள்ளது.

## மரணதண்டனை விதிக்கப்பட்டவர் நாடாளுமன்றத்துக்கு செல்லலாம் என்றால் ரஞ்சன் எதற்கு போகமுடியாது!

### லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி



மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகர மேன்முறையீடு செய்துள்ளமையால் அவருக்கு நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள முடியும் என்று சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன கூறியுள்ளார்.

அவ்வாறெனில் இரு தடவைகள் மேன்முறையீடு செய்துள்ள ரஞ்சன் ராமநாயக்கவிற்கும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதியளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி வலியுறுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

பிரேமலால் ஜயசேகரவிற்காக தற்போதைய சபாநாயகர் புதிய நாடாளுமன்ற கலாசாரமொன்றை உருவாக்கியுள்ளார்.

பிரேமலால் ஜயசேகர மேன் முறையீடு செய்திருக்கின்றமையால் அவர் நாடாளுமன்றத்திற்கு வர முடியும் என்று சபாநாயகர் கூறியுள்ளார்.

அவ்வாறெனில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதியளிக்க வேண்டும் என்று சபாநாயகரை வலியுறுத்துகின்றோம்.

சபாநாயகர் தீர்மானங்களை எடுக்கும் போது ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமான வகையில் அமைய வேண்டும்.

எனவே 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு சாதகமான தீர்மானம் அறிவிக்கப்பட வேண்டும் என்று சபாநாயகரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை என்பதால், எதிர்க்கட்சி அந்த சட்டத்துக்கான பரிந்துரைகளை நாடாளுமன்றத்தில் முன்வைக்க எதிர்பார்த்துள்ளது.

மரண தண்டனை குற்றவாளிக்கு நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள முடியும் என்ற கலாசாரத்தை தற்போதைய சபாநாயகரே அறிமுகப்படுத்தியுள்ளார். எனவே, ரஞ்சன் விவகாரத்திலும் சாதகமான தீர்மானத்தை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

## சில இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்!

### விசாரணைகள் ஆரம்பம்

நாட்டில் பயன்பாட்டிலுள்ள சில இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இணையத்தள முகவரியின் இறுதியில் உல்.கே. என முடிவடையும் சில இணையத்தளங்களே இவ்வாறு சைபர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன எனத் தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இவ்வாறு சைபர் தாக்குதலுக்குள்ளாகியுள்ள இணையத்தளங்களை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓசத சேனாநாயக்க தெரிவிக்கின்றார்.

## ஆடைத் தொழிற்சாலையில் நால்வருக்குக் கொரோனா!

### கேகாலையில் சம்பவம்

கேகாலையிலுள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் நான்கு ஊழியர்களுக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கேகாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் டபிள்யூ.எம்.அமரதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த தொழிற்சாலையிலுள்ள ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையிலேயே 4 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் அவர்களுடன் தொடர்பில் இருந்த 70 பேரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமரதிலக கூறியுள்ளார்.

## கிழக்கில் சூட்டப்பட்ட ........

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் பணிக்காமல், நெறிப்படுத்தாமல் தங்கள் விருப்பப்படியே அவர்கள் மாலையிட்டமையை அவதானிக்க முடிந்தது.

ஆனால், இவர்களை இனி ஒன்றிணைந்து நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு முஸ்லிம் தலைமைகளுக்கும் தமிழ்த்தலைமைகளுக்கும் உண்டு என்பதை இந்த மாலை சூட்டல் காட்டியுள்ளது. இது தேர்தல் கூட்டங்களிலும் வாசிகசாலைத் திறப்பு விழாக்களிலும் பிள்ளைகளிடம் கொடுத்துப் போடப்படும் மாலை போடுதல் அல்ல; வெறும் பகிடி அல்ல என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் புரிதல் நல்லது.

குறிப்பாக, கோவிந்தன் கருணாகரம், சுமந்திரன், சாணக்கியன், அமீர் அலி மற்றும் படத்தில் வராத -மாலைசூட்டப்பட்டோர் அனைவரும் அந்தப் பொறுப்புக்குரியவர்கள்.

மாலை சூடுதல் பற்றிய தமிழர்பண்பாடு பற்றி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் சொன்ன விடயத்தைப் பலரும் கூறக் கேட்டுள்ளேன்.

அவர் சொல்லியுள்ளார், 'மாலையை ஒருவருக்குச் சூட்டினால் மாலை சூட்டப்பட்டவர் அந்த நிகழ்வு முடியுமட்டும் அந்த மாலையுடன் இருத்தல் வேண்டும். அதுவே அந்த நிகழ்வையும் மாலை போட்டவரையும் மகிழ்விக்கும். அதுவே தமிழர் பண்பாடு.'

இப்படித் தனிநாயகம் அடிகள் சொன்னதுடன் மட்டுமல்லாது, அவர் தமக்கு அணிவிக்கப்பட்ட மாலையுடன் வைபவம் முடியும்வரை இருப்பாராம்.

அன்றைக்கு மாலை சூட்டப்பெற்ற வேளை, சுமந்திரனும், சாணக்கியனும் இடம்பொருளுணர்ந்து சற்று விநாடிகளில் மாலைகளைக் கழற்றிவிட்டனர்.

ஆனால், அமீர் அலி மாலையுடன் நின்றார். அவருக்கு சுமந்திரன் சாணக்கியனை விடவும் மாலைகளில் அனுபவம் நிறைய உண்டு. தமது மக்கள் தம்மை மதித்து அந்த நிகழ்வில் அளித்த மாலையை சற்று நேரமாவது வைத்திருக்க வேண்டிய நிலை அவருக்கு.

வரவேற்புக்காக அந்த மக்கள் அளித்த மாலையை தமக்கு அளிக்க வேண்டாம் எனத் தடுக்க அந்தச் சந்தர்ப்பத்தில் விரும்பாதமைதான் உண்மையான தலைமைப் பண்பாகும்.

மக்களை ஒருங்கிணைத்துச் செல்பவனே தலைவன்.

சேர் பொன். இராமநாதனை அன்று சிங்களத் தலைவர்கள் வரவேற்றபோதும், அவர் அதனை விரும்பாத போதிலும் அவர்களின் விருப்பத்தை மீறக்கூடாது என்ற காரணத்திற்காகவே ஏற்றதாகச் சொல்லப்படுவதுண்டு. அன்று இராமநாதன் மறுத்திருந்தால் அந்தப் படமும் வந்திருக்காது என்பர்.

வரலாற்றில் வரவேற்பு என்ற விடயத்தில் முஸ்லிம் மக்களின் மனதில் வடுவாகத் திகழ்ந்த அந்தச் சம்பவம் அவர் சிங்களத் தலைவர்களுக்காக பிரித்தானியா சென்று வாதாடி வென்று வந்த கதை ஆகும்.

1915 இல் இஸ்லாமிய மக்களின் சிறு சமூகக் குழுமம் ஒன்றின் மதநிந்தை முன்னால் சென்ற பௌத்த மத ஊர்வலம் ஒன்றைத் தொடர்ந்து சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலவரத்தால் டி எஸ் சேனநாயக்க, எவ்.ஆர்.சேனநாயக்க, ஏ.ஈ.குணசிங்க, ஈ.டபிள்யூ.பெரேரா, ஜயத்திலக போன்ற தலைவர்களை ஆங்கில அரசு கைது செய்த போது ஏற்கனவே அவர்களுடனிருந்த காழ்ப்புணர்வின் பழிவாங்கலாகவே அரசு செய்கிறதென்ற காரணத்தாலேயே சேர்.பொன்.இராமநாதன், சமுத்திரங்களில் அன்று போர் நடந்துகொண்டிருந்த வேளையிலும் பிரித்தானியா சென்று இவர்களுக்காக வாதாடி வென்று இவர்களை (சிங்களத் தலைவர்களைக்) காப்பாற்றினார் என்ற கருத்து ஒன்று இருந்த போதிலும், முஸ்லிம்கள் மத்தியில் தமிழ் மக்கள் மீதான அச்சத்தையும் ஐயத்தையும் தோற்றுவித்த நிகழ்வாக இராமநாதனின் செயற்பாடும், குதிரை வண்டியில் நிறுத்தி அவரை சிங்கள மக்கள் திரண்டு அழைத்த வரவேற்பும் திகழ்ந்திருந்தன.

அந்த அச்சங்களையும் ஐயங்களையும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கை மாற்றிவிட்டது என்பதையே இந்த மாலை சூட்டி வரவேற்ற காட்சிகள் சொல்லுகின்றன.

# நியாயத்தை எடுத்துரைக்க ஜெனிவாவில் இராணுவத்துக்கு வாய்ப்பளிக்க வேண்டும்!

## பேராசிரியர் குணதாச அமரசேகர கூறுகின்றார்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் யுத்தக்குற்றச்சாட்டுக்குள்ளாக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைக்க இம்முறை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இலங்கை தொடர்பில் மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை அடிப்படைத் தன்மையற்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் இம் மாதம் இடம்பெறவுள்ளது. இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கைக்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்குள்ளாக்கப்பட்டுள்ள தரப்பினர் தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைக்க இதுவரை வாய்ப்பு வழங்கப்படவில்லை. இம்முறை அதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான காரியாலயத்தில் முன்வைத்துள்ளோம்.



இலங்கைக்கு எதிராகத் தடை விதிக்கும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கிடையாது. பாதுகாப்பு சபையே நாடுகளுக்கு தடைவிதிக்கும். இலங்கைக்கு எதிராக சீனாவும், ரஷ்யாவும் ஒருபோதும் செயற்படாது. பலம் கொண்ட நாடுகளை கொண்டு சிறிய நாடுகளை அச்சுறுத்துவது ஐக்கிய நாடுகள் சபை தோற்ற கொள்கைக்கு முரணானது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரின் நிலைப்பாடு ஒருதலைப்பட்சமானது. இலங்கையில் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் இடம்பெறவில்லை என்று ஆணைக்குழுக்களால் முன்வைக்கப்பட்ட அறிக்கைகள் இதுவரை இடம்பெற்றகூட்டத்தொடர்களில்பேசப்படவில்லை. குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றன என அனுமானிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இந்நிலைமை இம்முறை மாற்றியமைக்கப்படுவது அவசியமாகும். – என்றார்.

# வத்தளை ஆலயத்தில் திடீரெனத் தீப்பரவல்!

வத்தளை - ஹேகித்த பகுதியிலுள்ள ஆலயமொன்றில் திடீர் தீப்பரவல், நேற்று (சனிக்கிழமை) காலை 9.45 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் இரண்டாவது மாடியில் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக வத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பவம் அறிந்து அந்த இடத்துக்கு விரைந்த கொழும்பு மாநகர தீயணைப்பு பிரிவு, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தத் தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்பாடத நிலையில் வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1992.06.06 மதம் - இந்து
ஜாதி - P ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 40 செவ் - 07 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1993.03.25 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 46 செவ் - 8 இல்
தகைமை - AL
தொழில் - புகையிரத நிலைய அதிபர்
எதிர்பார்ப்பு - AL படித்த அல்லது பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி -1984.07.08 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சுவாதி 4
கி.பா - 31 செவ் - 5 இல்
தகைமை - B.sc Software Engineer
தொழில் - நிதி அமைச்சு கொழும்பு
எதிர்பார்ப்பு - பட்டதாரி கொழும்பு வேலை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1988.10.10 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அத்தம்
கி.பா - 16 செவ் - 8 இல்
தகைமை - B.A.HONS தொழில் - கிராம சேவை
எதிர்பார்ப்பு - படித்த அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1993.01.31 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -பரணி 2
கி.பா - 32 செவ் - 06 இல்
தகைமை - B.sc civil Engineer தொழில் - Singapore Work
எதிர்பார்ப்பு - Emgineer or Doctor, Bank மணமகள்.

பிறந்த திகதி - 1989.08.01 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - 107 செவ்/சூரி - 01 இல்
தகைமை - AL தொழில் - பேக்கரி உரிமையாளர்
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.06.16 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 35 செவ் - 02 இல்
தகைமை - B.B.A. M.B.A
தொழில் - தொழில் அதிபர்
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.09.16 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 15 செவ் - 05 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகள் தேவை.

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1995.08.20 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 2
கி.பா - 08 செவ் -10 இல்
தகைமை - B.B.A, A.C.C.A தொழில் - Accountant
எதிர்பார்ப்பு - Civil Engineer, Doctor, Accoutant மணமகன்.

பிறந்த திகதி - 1989.11.29 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 32 செவ் - 12 இல்
தகைமை - B.A. தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் 1985 பின்பு தேவை.

பிறந்த திகதி - 1983.02.26 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 30 செவ் - 04 இல்
தகைமை - M.B.A தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - படித்த அரச சேவை அல்லது தனியார் மணமகன்.

பிறந்த திகதி - 1985.10.21 மதம் - இந்து
ஜாதி - K பெண் நட்சத்திரம் - திருகோணம் 1
கி.பா - 14 செவ் - 03 இல்
தகைமை - B.A
தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1991.04.16 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி 2
கி.பா - 22 செவ் - 02 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன்.

பிறந்த திகதி - 1989.09.24 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - புனர் பூசம் 3
கி.பா - 18 செவ்/சூரி - 12 இல்
தகைமை - Chatered Accountant
தொழில் - Accountant
எதிர்பார்ப்பு - Australia PR 1984 பின்பு பட்டதாரி மணமகன்.

பிறந்த திகதி - 1994.11.27 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரம் 3
செவ்- 09 இல் கி.பா - 35
தகைமை - Vetenery Doctor தொழில் -Vetenery Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer விரிவுரையாளர் மணமகன்.

பிறந்த திகதி - 1993.09.08 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 34 செவ் - 09 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor Colombo.
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகன்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000

## மணமகள் தேவை

பிறந்த திகதி - 31.12.1987
மதம் - இந்து N
நட்சத்திரம் - கார்த்திகை 2 ஆம் பாதம்
பாவம் - 16
தொழில் - காவல்துறை உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - அழகான பெண், அரச உததியோகம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு 077 1654 744

## மணமகன் தேவை

பிறந்த திகதி - 29.09.1992
மதம் - இந்து N
நட்சத்திரம் - சுவாதி 3 ஆம் பாதம்
செவ் - 12
பாவம் - 14
கல்வி - A/L
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

தொடர்புகளுக்கு 077 1654 744

## HOUSE FOR RENT

Address:
Temple Road, Jaffna.
Contact:-0779791957

## பாக்கு, கமுக மட்டை தேவை

குடில் உற்பத்திகள் நிறுவனமானது பாக்கு, கமுக மட்டைகளை மொத்தமாக கொள்வனவு செய்கிறது. கமுகு மட்டைகள் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு:- உடனடியாக பணம் கொடுத்து வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு 076 011 7002

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நாவற்குழியில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு 076 740 3814

## காணியும் வீடும் விற்பனைக்கு

சங்கானை Church Roadஇல் 10 பரப்புக் காணி, 02 வீடு என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு 0769677845

சூடான அரசியல் மற்றும் சமூகம் சார் கட்டுரைகளுடன்

# 30 ஆவது இதழ்




மண் வாசம் தவழும் மாறுபட்ட கதைத் தொடர்கள்

கொழும்பு மற்றும் கிழக்கிலும்

அனைத்து முகவர்களிடமும் கேட்டு வாங்குங்கள்

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

# சன் சொப்பிங் மால்

# SUN SHOPING MALL







இன்று முதல் கோலாகல ஆரம்பம்....!



Mother & Baby Care Dresses
Electronics & Toys
Stationeries & Fancy Items
Visa Processing Centre

அனைத்துப் பொருட்களும் 10% விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்




அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

☎ 021 221 7247

267A, பலாலி வீதி, கெட்டப்பொல் சந்தி, திருநெல்வேலி.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல 30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2021 இல் வெளியிடப்பெற்றது.